**ம.அ.2.ந.க.எண்.இ1/3566/2011**
**ஆணையர் அவர்களின் 24.06.2011 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.190/2011 **பொருள் எண்.1**

பழுதடைந்த பொதுக்கழிப்பிடம் இடிக்க அனுமதி.

| வார்டு எண்–14 | மண்டலம்–2 |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | சூரியநாராயணா சாலையில் அமைந்துள்ள திடீர் நகர் பொதுக்கழிப்பிட கட்டிடம் இடிக்க அனுமதி |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | சென்னை மாநகராட்சி, 1980 ஆம் வருடம் |
| தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.74176.98 |
| கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இடிக்கப்பட வேண்டியுள்ளது |
| பரப்பளவு | 422.16 சதுர அடிகள்(39.22 ச.மீ.) |
| திட்ட முன் மொழிதல் | கழிப்பிடத்தை இடித்துவிட்டு புதிதாக கட்டடப்படவுள்ளது. |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண் மற்றும் நாள் | 2வது வார்டு குழு தீர்மான எண்.24/2011 நாள்.24.01.2011 |

எனவே, மேற்கண்ட கழிப்பிடம் இடிப்பதற்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

13.07.2011 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.37 /2011 நாள் 13.07.2011-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“18.07.2011 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 88/2011, நாள்:18.07.2011-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.அ.2.ந.க.எண்.இ1/3567/2011</u>**
**<u>ஆணையர் அவர்களின் 24.06.2011 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.191/2011 **பொருள் எண்.2**

<u>பழுதடைந்த பொதுக்கழிப்பிடம் இடிக்க அனுமதி.</u>

| வார்டு எண்–14 | மண்டலம்–2 |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | ஜீவரத்தினம் சாலையில் அமைந்துள்ள பொதுக்கழிப்பிட கட்டிடம் இடிக்க அனுமதி |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | சென்னை மாநகராட்சி, 1980 ஆம் வருடம் |
| தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.24,478.62 |
| கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இடிக்கப்பட வேண்டியுள்ளது |
| பரப்பளவு | 104.20 சதுர மீட்டர் |
| திட்ட முன் மொழிதல் | கழிப்பிடத்தை இடித்துவிட்டு புதிதாக கட்டடப்படவுள்ளது. |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண் மற்றும் நாள் | 2வது வார்டு குழு தீர்மான எண்.25/2011 நாள்.24.01.2011 |

எனவே, மேற்கண்ட கழிப்பிடம் இடிப்பதற்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

13.07.2011 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.38 /2011 நாள் 13.07.2011-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“18.07.2011 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 89/2011, நாள்:18.07.2011-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.9.ந.க.எண்.பி2/3476/2011**
**ஆணையர் அவர்களின் 16,07.2011 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.192/2011 **பொருள் எண்: 3**

## பழுதடைந்த துப்புரவு ஆய்வாளர் அலுவலகம் மற்றும் ஓட்டுநர்கள் கட்டடம் இடிக்க அனுமதி.

| வார்டு எண்–139 | மண்டலம்–9 |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம் அலுவலக வளாகத்தில் உள்ள அண்ணாசாலை துப்புரவு ஆய்வாளர் அலுவலகம் மற்றும் ஓட்டுநர்கள் ஓய்வறை. |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | பணித்துறை 1981 |
| தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.3,500/– |
| கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. |
| பரப்பளவு | 1650 ச.அடி. மேற்படி கட்டிடம் இடிப்பதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்ததாரர் மூலம் கட்டிடம் இடிக்கப்படும். |
| திட்ட முன் மொழிதல் | கட்டிடத்துறையால் புதியதாக கட்டப்படவுள்ள மண்டலம்–9 அலுவலக தேவைக்காக. |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண் மற்றும் நாள் | வார்டு குழு தீர்மான எண்.139 மற்றும் நாள்–24.06.2011 |

எனவே, மேற்குறிப்பிட்ட கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“18.07.2011 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 103/2011, நாள்:18.07.2011-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**இ.பொ.து.ந.க.எண்.ம.லாரி நி./ 066/ 2010**
**ஆணையாளரின் 18.7.2011 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.193/2011 **பொருள் எண்.4**

**பயனற்ற வாகனங்கள் – கழிவு செய்து விற்பனை செய்தல்**

சென்னை மாநகராட்சியில் துப்புரவு மற்றும் இதர பணிகளுக்காக சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு பொருளாதார ரீதியில் பழுதுப் பார்த்து மீண்டும் பயன்படுத்த இயலாத நிலையிலுள்ள கீழ்கண்ட 13 வாகனங்களை கழிவு செய்து விற்பனை செய்யும் பொருட்டு 28.08.2007, 08.09.2008,28.11.2009,16.12.2009 அன்று தொழில் நுட்பக்குழுவினரால் ஒவ்வொரு வாகனத்தையும் ஆய்வு செய்து மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டது.

அதன்படி 1.12.2010 அன்று ஒப்பந்த புள்ளிகள் பெறவும் 02.12.2010 அன்று ஏலம் நடத்தவும் இறுதி நாள் அறுதியிட்டு தினசரி நாளிதழிலும் 11.11.2010 அன்று சென்னை மாநகராட்சி செய்தி வெளியீட்டிலும் விளம்பரம் செய்யப்பட்டது.

துணை ஆணையாளர் (சுகாதாரம்) அவர்களின் 01.02.2011 உத்திரவின்படி ஒப்பம் ரத்து செய்யப்பட்டது. மறு ஒப்பம் 23.03.2011 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறவும் 24.03.2011 அன்று ஏலம் நடத்தவும் இறுதி நாள் அறுதியிட்டு தினசரி வெளியாகும் தமிழ் (தினந்தந்தி) நாளிதழில் 24.02.2011 அன்றும் சென்னை மாநகராட்சி செய்தி வெளியீட்டில் 24.02.2011 அன்றும் விளம்பரம் செய்யப்பட்டது.

தேர்தல் விதிமுறைகளின் காரணமாக மேற்கண்ட தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி பெறுவதும், மற்றும் ஏலம் நடத்துவதும் தள்ளி வைக்கப்பட்டது. 25.05.2011 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறவும், 26.05.2011 அன்று ஏலம் நடத்தவும் இறுதி நாள் அறுதியிட்டு சென்னை மாநகராட்சி செய்தி வெளியீட்டில் 12.05.2011 அன்று அறிவிப்பு செய்யப்பட்டது.

ஒப்பந்த புள்ளிகள் பெறும் இறுதி நாளான 25.05.2010 அன்று இரண்டு நபர்கள் மட்டும் விலைபுள்ளிகள் அளித்துள்ளார்கள்.01.06.2011 அன்று நடைபெற்ற ஏலத்தில் 19 ஏலதாரர்கள் கலந்து கொண்டு விலை கோரினார்.

வரிசை எண் 1 முதல் 3 மற்றும் வரிசை எண் 9,10,12,13 வரை உள்ள வாகனங்கள் ஒவ்வொன்றிற்கும் தொழில் நுட்பக்குழு நிர்ணயித்த (மொத்தம் ரூ. 3,70,700/–) மதிப்பை விட ஏலத்தில் வாங்குவதற்கு கோரிய விலையைவிட (மொத்தம் ரூ. 7,55,497/–) அதிகமாக ரூ.3,84,797/– இருப்பதால் ஏலதாரர்களுக்கு உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

1. மத்திய லாரி நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ள கீழ்கண்ட 13 வாகனங்கள் அனைத்தும் 10 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு பொருளாதார ரீதியில் பழுதுபார்த்து மீண்டும் பயன்படுத்த இயலாத நிலையில் இருப்பதால் கழிவு செய்யவும்.

2. வரிசை எண் 1 முதல் 3 மற்றும் வரிசை எண் 9,10,12,13 வரை உள்ள வாகனம் வாங்குவதற்கு ஏலத்தில் கோரிய (மொத்தம் ரூ.7,55,497/– விலையானது தொழில் நுட்பக்குழு ஆய்வு செய்து நிர்ணயித்த (மொத்தம் ரூ.3,30,700/–) மதிப்பை விட கூடுதலாக ரூ.3,84,797/– இருப்பதால் உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யவும்.

| வ. எண். தொகுப்பு எண் | வாகன பதிவு எண் | வகை | தொழில் நுட்பக்குழு நிர்ணயித்த மதிப்பு ரூ. | கோரிய உயர்ந்த விலை ரூ. | ஏலதாரர்/ ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | என்.பீ.2 | புல்டோசர் | 25,000/– | 1,52,999/– | திரு. A. பரந்தாமன் |
| 2. | என்.பீ.3 | புல்டோசர் | 21,500/– | 1,52,999/– | திரு. A. பரந்தாமன் |
| 3. | எஸ்.பீ.3 | புல்டோசர் | 40,000/– | 1,52,999/– | திரு. A. பரந்தாமன் |
| 4. | TN-04-H-1936 | சுவராஸ்மஸ்தா | 73,200/– | 60,999/– | திரு. A. பரந்தாமன் |
| 5. | TN-04-H-4165 | சுவராஸ்மஸ்தா | 74,000/– | 60,999/– | திரு. A. பரந்தாமன் |
| 6. | TN-04-H-4162 | சுவராஸ்மஸ்தா | 75,500/– | 60,999/– | திரு. A. பரந்தாமன் |
| 7. | TN-04-H-4981 | சுவராஸ்மஸ்தா | 76,200/– | 60,999/– | திரு. A. பரந்தாமன் |
| 8. | TN-04-H-4161 | சுவராஸ்மஸ்தா | 77,500/– | 60,999/– | திரு. A. பரந்தாமன் |
| 9. | TN-04-H-9708 | சுவராஸ்மஸ்தா | 69,000/– | 73,000/– | திரு.எச்.ஹாருன் ரஜீத் |
| 10. | TN-04-H-9209 | சுவராஸ்மஸ்தா | 68,000/– | 74,000/– | திரு.எச்.ஹாருன் ரஜீத் |
| 11. | TN-04-H-4164 | சுவராஸ்மஸ்தா | 79,000/– | 60,999/– | திரு. A. பரந்தாமன் |
| 12. | TN-04-H-4158 | சுவராஸ்மஸ்தா | 75,000/– | 76,000/– | திரு. M.Y. அப்துல் கரீம் |
| 13. | TN-04-H-4159 | சுவராஸ்மஸ்தா | 72,200/– | 73,500/– | திரு. M.Y. அப்துல் கரீம் |

3. ஏலத்தில் விலைப்புள்ளி கோராத வரிசை எண் 4 முதல் 8வரை மற்றும் வரிசை எண் 11 ஆகிய மொத்தம் 6 வாகனங்களுக்கு ஒப்பந்தத்தில் கோரிய விலையில் தொழிற்நுட்பக்குழு நிர்ணயித்த விலையைவிட குறைவாக உள்ளபடியால் மறு ஒப்பம் கோரவும்.

4. மேற்கண்ட வரிசை எண் 1 முதல் 3 வரை மற்றும் வரிசை எண் 9,10,12,13 வரை உள்ள வாகனங்களை விற்பனை செய்யும் பொருட்டு ஏற்கனவே செலுத்தப்பட்ட ஒப்பவைப்புத் தொகையை (20%) சரிகட்டி மீதம் செலுத்த வேண்டிய விலை

தொகையுடன் விற்பனை செய்யப்படும் நேரத்தில் அமுலிலுள்ள விற்பனை வரியையும் (மொத்த விலைக்கு) தனித்தனியாக செலுத்துச் சீட்டின் மூலம் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி அனுமதி பெற்ற பின்னர் கொண்டு செல்லவும் அனுமதி வேண்டப்படுகிறது.

மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

''இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.07.2011 அன்று தீர்மான எண். 105/2011–ன் படி நிலைக்குழு (பணிகள்)–வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**இ.பொ.து.ந.க.எண்.ம.லாரி நி./ 052/ 2008**
**ஆணையாளரின் 18.7.2011 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.194/2011 **பொருள் எண்.5**

**பயனற்ற வாகனங்கள் – கழிவு செய்து விற்பனை செய்தல்**

சென்னை மாநகராட்சியில் துப்புரவு மற்றும் இதர பணிகளுக்காக சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு பொருளாதார ரீதியில் பழுதுப் பார்த்து மீண்டும் பயன்படுத்த இயலாத நிலையிலுள்ள கீழ்கண்ட 30 கனரக மற்றம் இலகுரக வாகனங்களை கழிவு செய்து விற்பனை செய்யும் பொருட்டு 22.07.2008 தொழில் நுட்பக்குழுவினரால் ஒவ்வொரு வாகனத்தையும் ஆய்வு செய்து மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டது.

அதன்படி 25.09.2008 மற்றும் 06.12.2008 ஆகிய தேதிகளில் ஏற்கனவே இரண்டு முறை ஒப்பம் ஏலம் கோரப்பட்டு நிர்வாக காரணங்களால் ரத்து செய்யப்பட்டது. மறுஒப்பம் 17.02.2011 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறவும் 18.02.2011 அன்று ஏலம் நடத்தவும் இறுதி நாள் அனுதியிட்டு தினசரி வெளியாகும் தமிழ் (முரசொலி) நாளிதழ் 27.01.2011 அன்றும் சென்னை மாநகராட்சி செய்தி வெளியீட்டில் 27.01.2011 அன்றும் விளம்பரம் செய்யப்பட்டது. நிர்வாக காரணங்களால் ஒப்பந்தப்புள்ளி பெறுவது 16.03.2011 என்றும் ஏலம் நடைபெறும் நாள் 17.03.2011 என்றும் சென்னை மாநகராட்சி செய்தி வெளியீட்டில் அறிவிப்பு செய்யப்பட்டது.

தேர்தல் விதிமுறைகளின் காரணமாக மேற்கண்ட தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி பெறுவதும், மற்றும் ஏலம் நடத்துவதும் தள்ளி வைக்கப்பட்டது 25.05.2011 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறவும், 26.05.2011 அன்று ஏலம் நடத்தவும் இறுதி நாள் அறுதியிட்டு சென்னை மாநகராட்சி செய்தி வெளியீட்டில் 12.05.2011 அன்று அறிவிப்பு செய்யப்பட்டது.

ஒப்பந்தப்புள்ளி பெறும் இறுதி நாளான 25.05.2011 அன்று 3 நபர்கள் மட்டும் விலைப்புள்ளி அளித்துள்ளார்கள் 01.06.2011 அன்று 26 ஏலதாரர்கள் ஏலத்தில் கலந்து கொண்டு விலை கோரினர்.

30 எண்ணிக்கை கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் ஒவ்வொன்றிற்கும் தொழில்நுட்பக்குழு நிர்ணயித்த (மொத்தம் ரூ. 8,21,560) மதிப்பை விட ஏலத்தில் வாங்குவதற்கு கோரிய விலை (மொத்தம் ரூ. 28,71,525) யானது ரூ.20,49,965/–அதிகமாக இருப்பதால் ஏலதாரர்களுக்கு உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

1. மத்திய லாரி நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ள குறிப்பில் கூறப்பட்ட 30 கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் அனைத்தும் 10 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு பொருளாதார ரீதியில் பழுதுபார்த்து மீண்டும் பயன்படுத்த இயலாத நிலையில் இருப்பதால் கழிவு செய்யவும் மற்றும் விற்பனை செய்யும் பொருட்டு தொழில்நுட்பக்குழு அங்கத்தினர்களால் ஒவ்வொரு வாகனத்தையும் ஆய்வு செய்து நிர்ணயித்த மொத்தம் ரூ.8,21,560/– மதிப்பைவிட ஏலத்தில் வாங்ககுவதற்கு கோரிய விலை மொத்தம் ரூ.28,71,525/– யானது ரூ.20,49,965/– அதிகமாக இருப்பதால் விற்பனை செய்யவும்;

| வ. எண். தொகுப்பு எண் | வாகன பதிவு எண் | வகை | தொழில் நுட்பக்குழு நிர்ணயித்த மதிப்பு ரூ. | கோரிய உயர்ந்த விலை ரூ. | ஏலதாரர்/ ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | டிஎன்04 ஏ 0575 | லேலாண்ட் | 33,600/– | 1,02,349/– | M/S அம்மன் அசோசியேட்ஸ் |
| 2. | டிஎன்04 ஏ 0134 | லேலாண்ட் | 23,600/– | 1,26,555/– | திரு. அ. பரந்தாமன் |
| 3. | டிஎன்04 பீ 3530 | லேலாண்ட் | 37,100/– | 1,23,999/– | திரு. அ. பரந்தாமன் |
| 4. | டிஎன்04 பீ 3528 | லேலாண்ட் | 23,600/– | 97,500/– | திரு. சி. சரவணன் |
| 5. | டிஎன்04 பீ 4423 | லேலாண்ட் | 32,600/– | 1,10,555/– | திரு. அ. பரந்தாமன் |
| 6. | டிஎன்04 பீ 4442 | லேலாண்ட் | 37,600/– | 1,36,999/– | திரு. அ. பரந்தாமன் |
| 7. | டிஎன்04 பீ 4059 | லேலாண்ட் | 40,600/– | 1,34,555/– | திரு. அ. பரந்தாமன் |
| 8. | டிஎன்04 பீ 3633 | லேலாண்ட் | 32,600/– | 1,21,999/– | திரு. அ. பரந்தாமன் |
| 9. | டிஎன்04 பீ 4166 | லேலாண்ட் | 32,600/– | 1,28,666/– | திரு. அ. பரந்தாமன் |
| 10. | டிஎன்04 பீ 3626 | லேலாண்ட் | 37,600/– | 1,25,999/– | திரு. அ. பரந்தாமன் |
| 11. | டிஎன்04 பீ 4439 | லேலாண்ட் | 42,100/– | 1,36,999/– | திரு. அ. பரந்தாமன் |
| 12. | டிஎன்04 பீ 4441 | லேலாண்ட் | 35,600/– | 1,34,999/– | திரு. அ. பரந்தாமன் |
| 13. | டிஎன்04 சி 0038 | லேலாண்ட் | 35,100/– | 1,42,000/– | திரு. அ. பரந்தாமன் |
| 14. | டிஎன்04 சி 0031 | லேலாண்ட் | 30,600/– | 1,39,000/– | திரு. அ. பரந்தாமன் |
| 15. | டிஎன்04 இ 3491 | லேலாண்ட் | 43,200/– | 1,34,555/– | திரு. அ. பரந்தாமன் |
| 16. | டிஎன்04 இ 3497 | லேலாண்ட் | 32,100/– | 95,999/– | திரு. அ. பரந்தாமன் |
| 17. | டிஎன்04 ஏ 0191 | டாடா பென்ஞ் | 42,600/– | 1,06,000/– | மெ. ஜெமினி டிரேடர்ஸ் |
| 18. | டிஎன்04 ஏ 0201 | டாடா பென்ஞ் | 28,200/– | 1,07,000/– | மெ. ஜெமினி டிரேடர்ஸ் |
| 19. | டிஎன்04 பீ 6058 | டாடா 608 | 15,860/– | 66,000/– | M/S அம்மன் அசோசியேட்ஸ் |
| 20. | டிஎன்04 பீ 7833 | டாடா 608 | 13,860/– | 67,000/– | M/S அம்மன் அசோசியேட்ஸ் |
| 21. | டிஎன்04 பீ 8227 | டாடா 608 | 13,860/– | 66,000/– | M/S அம்மன் அசோசியேட்ஸ் |
| 22. | டிஎன்04 பீ 6250 | டாடா 608 | 19,860/– | 65,000/– | M/S அம்மன் அசோசியேட்ஸ் |
| 23. | டிஎன்04 சி 4147 | டாடா 608 | 13,860/– | 63,000/– | M/S அம்மன் அசோசியேட்ஸ் |
| 24. | டிஎன்04 இ 2976 | சுவராஜ் மஸ்தா | 22,000/– | 75,500/– | திரு. M.Y. அப்துல்கரிம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25. | டிஎன்04 இ 3135 | சுவராஜ் மஸ்தா | 23,260/– | 73,500/– | திரு. M.Y. அப்துல்கரிம் |
| 26. | டிஎன்04 இ 2581 | சுவராஜ் மஸ்தா | 20,060/– | 60,999/– | திரு. அ. பரந்தாமன் |
| 27. | டிஎன்04 இ 4023 | சுவராஜ் மஸ்தா | 23,860/– | 68,000/– | M/S. ஆலயம் ஆட்டோ மொபைல்ஸ் |
| 28. | டிஎன்09 ஜி 0116 | ட்ராக்ஸ் ஜீப் | 11,360/– | 24,899/– | M/S. ஆலயம் ஆட்டோ மொபைல்ஸ் |
| 29. | டிஎன்04 பீ 0003 | அம்பாஸிடர் கார் | 11,360/– | 18,000/– | திரு. எச். ஆருண் ரசீத் |
| 30. | டிஎன்01 எம் 0001 | அம்பாஸிடர் கார் | 11,360/– | 17,899/– | M/S. ஆலயம் ஆட்டோ மொபைல்ஸ் |
| | | மொத்தம் | 8,21,560/– | 28,71,525/– | |

2. குறிப்பில் கூறப்பட்ட 30 கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் அனைத்தையும் விற்பனை செய்யவும் பொருட்டு ஏற்கனவே செலுத்தப்பட்ட ஒப்பவைப்புத் தொகையை (20%) சரிகட்டி மீதம் செலுத்த வேண்டிய விலை தொகையுடன் விற்பனை செய்யப்படும் நேரத்தில் அமுலிலுள்ள விற்பனை வரியையும் (மொத்த விலைக்கு) தனித்தனியாக செலுத்துச் சீட்டின் மூலம் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி அனுமதி பெற்ற பின்னர் கொண்டு செல்லவும் அனுமதி வேண்டப்படுகிறது.

மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **20.07.2011** அன்று தீர்மான எண். **104/2011**–ன் படி நிலைக்குழு (பணிகள்)–வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.“

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**மா.கு.ந.(ம) ம.கு.ந.க.எண்.எப்1/1974/2011**
**ஆணையாளர் அவர்களின் 16.07.2011 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.195/2011 பொருள் எண்.6

**வயதுமுதிர்வு ஓய்வு அனுமதி**

டாக்டர்.பா.சாருமதி, துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் அவர்கள் சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக 31.05.1979AN அன்று பணியமர்த்தப்பட்டார். அரசாணை எண்.2193/H&FW/ நாள் 02.11.1982-ன்படி 31.05.1979AN முதல் பணி வரன்முறைபடுத்தி 01.06.1981 முதல் தகுதிக்காண்பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார். பின்னர் அரசாணை எண் 225 MAWS நாள் 20.06.2006- மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையரது செயல் முறை ஆணை எண்.எப்4/553/01, நாள் 28.09.2006ன்படி மண்டல அலுவலராக 16.12.2004 முதல் பதவி உயர்வு பெற்றார். பின்னர் மன்றத்தீர்மான எண்.231/09. நாள்.22.07.2009 மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணை எண்.எப்4/1621/09 நாள் 05.08.2009 முதல் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலராக பதவி உயர்வு பெற்றார். பின்னர் மன்றத் தீர்மான எண்.1348/10 நாள்.29.07.2010 மற்றும் ஆணையரது செயல் முறை ஆணை எண்.எப்4/451/10 நாள் 18.08.2010–ன்படி துணை திட்ட ஒருங்கிணைப்பாளராக 19.08.10 முதல் பதவி உயர்வு பெற்று பணிவரன்முறைப் படுத்தப்பட்டுள்ளது. இவருடைய பிறந்த தேதி 29.07.1953 வயது முதிர்வு ஓய்வு நாள் 31.07.2011.

1. டாக்டர்.பா.சாருமதி, துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் அவர்கள் மீது நாளது தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 04.07.2011 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நாளது தேதி வரையில் இவர் சென்னை மாநகராட்சியில் நிதி சார்ந்த இழப்பீடு ஏதும் ஏற்படுத்தவில்லை என சான்றளிக்கப்பட்டுள்ளது. நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்யவேண்டியது இல்லை. அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித பிடித்தங்களும் செய்ய வேண்டியதில்லை. சென்னை மாநகராட்சி, உள்ளிருப்பு குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை. சென்னை மாநகராட்சியில் வீடு கட்ட முன்பணம் ரூ.2,20,000/– பெற்று கடன் வட்டியுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளது .
2. இத்துணை திட்ட ஒருங்கிணைப்பாளரது வயது முதிர்வு ஓய்வு பெறுவது குறித்து உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு முன் மொழிவு அனுப்பப்பட்டு தணிக்கை துறையில் சரிபார்க்கப்பட்டு சான்று வழங்கப்பட்டுள்ளது.
3. தனியர் மீது 31.07.2011 வரை தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ பொறுப்பாக்கி நிதி இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் ஏதும் நிலுவையில் இல்லை. பின்னர் ஏதேனும் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு குறித்து தெரியவரின் தனியருக்கு வழங்கப்படவுள்ள ஒய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்து கொள்ள ரூ.20/– முத்திரை தாளில் சம்மதக் கடிதம் அளித்துள்ளார்.
4. தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை/குற்றவியல் நடவடிக்கை ஏதும் இல்லை என சான்றளிக்கப்படுகிறது.

சென்னை மாநகராட்சியில் இவருடைய பதவி வகுப்பு 1B என்பதால் இவரை பணியிலிருந்து விடுவிக்க மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது.

எனவே, டாக்டர்.பா.சாருமதி, துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் அவர்களை நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு மற்றும் நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு நிலுவையில் இருப்பது ஆகியவைகள் பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அன்னாரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு அவரை **31.07.2011** அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>இ.பொ.து.ந.க.எண்.எம்4/4817/2010</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 08.07.2011 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.196/2011 பொருள் எண்.7

**<u>வயதுமுதிர்வு ஓய்வு அனுமதி</u>**

திரு. கே. தங்கவேலு, உதவி செயற்பொறியாளர் (இ) அவர்கள் 31.07.2011 அன்று வயதுமுதிர்வு ஓய்வு பெறவுள்ளார். இவர் வகிக்கும் பதவி மாநகராட்சி பணி பிரிவு வகுப்பு 2ன் கீழ் வருவதால் இவரை பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதி அளிக்க மாமன்ற அனுமதி தேவைப்படுகின்றது. தனியர் மாநகராட்சி பணியில் 24.09.1975 அன்று வரைவாளராக பணியில் சேர்ந்துள்ளார்.

இவர் சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் அலுவலக முன்பணம் ஏதும் நிலுவையில் இல்லை. இவர் மீது தணிக்கை தடை ஏதும் நிலுவையில் இல்லை என்ற விவரம் இவர் பணிபுரிந்த துறைகளிலிருந்து பெறப்பட்டுள்ளது. தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை.

மேலும், விழிப்பு அலுவலரின் 23.06.2011 நாளிட்ட குறிப்பில் தனியர் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சியில் 35 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வருகின்றார். தனியரை பொறுப்பாக்கும் நிதி இழப்பீடு தணிக்கைத் தடை ஏதும் நிலுவையில் இல்லை என பிற துறைகளில் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் தணிக்கைத் தடை இல்லை என சான்றளிக்கப்படுகிறது. தனியர் மீது தணிக்கை தடைகள் இருப்பது பின்னர் தெரியவரின் அதற்கு தனியரை பொறுப்பாக்கி, அவரது பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தனியரை 31.07.2011 பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வில் செல்ல அனுமதிக்கலாம்.

எனவே, திரு. கே. தங்கவேலு, உதவி செயற்பொறியாளர், இயந்திரப் பொறியியல் துறை, அவர்கள் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏற்படுத்தும் தணிக்கை தடை இருப்பது பின்னர் தெரியவரின், அத்தொகை தனியரின் ஓய்வூதியம் (ம) பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி 31.07.2011 பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வு பெற நியமனக்குழு மூலமாக மன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**இ.பொ.து.ந.க.எண்.எம்4/4811/2010**
**ஆணையாளர் அவர்களின் 19.07.2011 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.197/2011 பொருள் எண்.8

**வயதுமுதிர்வு ஓய்வு அனுமதி**

திரு.என்.யு.கிருஸ்ணாநந்தா, மேற்பார்வை பொறியாளர் (இ) அவர்கள் 31.08.2011 அன்று வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளார். இவர் வகிக்கும் பதவி மாநகராட்சி பணியமைப்பு வகுப்பு 1 B - ன் கீழ் வருவதால் இவரை பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதி அளிக்க மாமன்ற அனுமதி தேவைப்படுகின்றது.

இவர் சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் அலுவலக முன் பணம் ஏதும் நிலுவையில் இல்லை. இவர் மீது தணிக்கை தடை ஏதும் நிலுவையில் இல்லை என்ற விவரம் இவர் பணிபுரிந்த பிற துறைகளில் இருந்து பெறப்பட்டுள்ளது. தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை.

மேலும், விழிப்பு அலுவலரின் 16.06.2011 நாளிட்ட குறிப்பில் தனியர் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சியில் 33 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வருகின்றார். தனியரை பொறுப்பாக்கும் நிதி இழப்பீடு தொடர்பாக தணிக்கைத் தடை ஏதும் நிலுவையில் இல்லை என பிற துறைகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இயந்திர பொறியியல் துறையில் 2006–2007ம் ஆண்டு தணிக்கை தடை பத்தி–13ல் தனியருக்கு உதவி செயற்பொறியாளர் பதவியில் ஊதியம் மறு நிர்ணயம் மற்றும் செயற் பொறியாளர் பதவியில் ஊதியம் நிர்ணயம் குறைபாடு தொகை ரூ.1,44,354/– பிடித்தம் செய்யப்பட வேண்டும். என தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தணிக்கை தடையை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதை தவிர தனியர் மீது தணிக்கை தடைகள் இருப்பது பின்னர் தெரியவரின் அதற்கு தனியரை பொறுப்பாக்கி, அவரது பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தனியரை 31.08.2011 பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வில் செல்ல அனுமதிக்கலாம்.

எனவே, திரு. என்.யு.கிருஸ்ணாநந்தா, மேற்பார்வை பொறியாளர் (இ) இயந்திரப் பொறியியல் துறை, அவர்கள் வகித்து வரும் பதவி வகுப்பு 1 – B ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால், தனியரை சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏற்படுத்தும் தணிக்கை தடை இருப்பது பின்னர் தெரியவரின், அத்தொகை தனியரின் ஓய்வூதியம் (ம) பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி 31.08.2011 பிற்பகல் முதல் மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்க ஆணை வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ப.து.ம.வெ.தா.க.ந.க.எண்.இ3/440/2011**
**ஆணையாளர் அவர்களின் 05.07.2011 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.198/2011 பொருள் எண்.9

**தன்விருப்ப ஓய்வு பின்னேற்பு அனுமதி**

திரு. கே. கேசவன், செயற்பொறியாளர் அவர்களை ஆணையர் அவர்களது செயல்முறை ஆணை நாள் 04.10.2010ன்படி தனியர் அவர்கள், மத்திய வெப்பத்தார் கலவை நிலையம், பணித்துறை 07.07.2010 நாளிட்ட மனுவை ஏற்று நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டும், சென்னை மாநகராட்சி நிபந்தனைகளை தணிக்கைத் தடைகள் காரணமாக தனியர் செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகையினை அன்னாரது பணிக் கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்படுத்தியும் தனியரை 04.10.2010 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்லஅனுமதிக்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு ஆணை பெறப்படவேண்டும்.

தனியர் பணி சம்பந்தமாக சில விவரங்கள் பின்வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | திரு. கே. கேசவன் |
| 2. | இறுதியாக வகித்த பதவி பணியிடம் | : | செயற்பொறியாளர்,<br>மத்திய வெப்பத்தார் கலவை நிலையம்<br>பணித்துறை. |
| 3. | முதன் முதலில் பணியமர்த்தப்பட்ட நாள் மற்றும் பதவி | : | 20.12.1978, உதவி போர்மேன்<br>இயந்திரவியல் துறை |
| 4. | Training Office (A.E. Grade) | : | 01.09.1984 General Work Shop<br>Mechanical Department. |
| 5. | உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்ற நாள் | : | 07.06.1991 (S.E. North) |
| 6. | செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்ற நாள் | : | 01.12.2001 (Buildings) |
| 7. | தன்விருப்ப ஓய்வு கோரி மனு அளித்த நாள் | : | 07.07.2010 |
| 8. | தன்விருப்ப ஓய்வு அனுமதிக்க வேண்டிய நாள் | : | 04.10.2010 |

காவல் துறை கண்காணிப்பாளர் குற்றப் புலனாய்வுத் துறை, சென்னை-32, அவர்களின் 22.09.2010 நாளிட்ட கடிதத்தில் தனியர் மீது கிரிமினல் குற்றம் மற்றும் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

இயக்குநர் விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறை, சென்னை-28, அவர்களின் 22.09.2010 நாளிட்ட கடிதத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

விழிப்புப் பணி அலுவலர், சென்னை மாநகராட்சி, அவர்களின் 19.08.2010 நாளிட்ட தம் குறிப்பில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்க செயலாளர் அவர்களின் 16.09.2010 நாளிட்ட கடிதத்தில் தனியர் கூட்டுறவு சங்க உறுப்பினர் அல்ல என்றும், கூட்டுறவு சங்கத்திற்கு திரும்ப செலுத்த வேண்டிய தொகைகள் ஏதும் நிலுவையில் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மண்டல அலுவலர்-3 அவர்களின் 22.09.2010 நாளிட்ட குறிப்பில், தனியர் மீது மண்டலம்-3ல் பணிபுரிந்த காலத்தில் (22.02.1989 முதல் 18.11.1990 வரை) தணிக்கைத் தடைகள் ஏதும் நிலுவையில் இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

தனியர் பணிபுரிந்த மண்டலம்-2, மண்டலம்-7, கட்டிடத்துறை மற்றும் இயந்திரப் பொறியியல் துறையிலிருந்து தணிக்கைத் தடை விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளது. இதில் மண்டலம்-7ல் அளிக்கப்பட்டுள்ள தணிக்கை அறிக்கையில் தனியரை கூட்டுப் பொறுப்பாக்கியும், கட்டிடத்துறை மற்றும் இயந்திரப் பொறியியல் துறையில் தனியரின் மீது தணிக்கைத் தடை ஏதும் நிலுவையில் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளது. மேலும் மண்டலம்-2ல் அளிக்கப்பட்டுள்ள தணிக்கை அறிக்கையில் தனியருக்கு 01.01.1996 முதல் புதிய ஊதிய நிர்ணயம் செய்ததில் மிகை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது என்றும் ரூ.6,325/-ஐ தனியாரிடமிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி இத்தொகையினை தனியர் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ள அதற்கான ரசீது எண்.6, நாள் 04.10.2010 இணைக்கப்பட்டுள்ளது.

தனியர் 01.07.2007 முதல் மத்திய வெப்பத்தார் கலவை நிலையம் பணித்துறையில் பணிபுரிந்து வந்துள்ள 2007-2008 முடிய உள்ள காலங்களுக்கான தணிக்கை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதுபடி தணிக்கை தடைகள் ஏதும் தனியரை பொறுப்பாக்கும் வகையில் நிலுவையில் இல்லை என தணிக்கை அறிக்கை வாயிலாக தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, திரு. கே. கேசவன், செயற்பொறியாளர், பணித்துறை, மத்திய வெப்பத்தார் கலவை நிலையம் அவர்களுக்கு மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டும், சென்னை மாநகராட்சியின் நிதி இழப்பீடு மற்றும் தணிக்கை தடைகளுக்கு தனியர் பொறுப்பாகிறார் என பின்னர் தெரியவரின் அவற்றை தனியரின் பணிக்கொடை தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தியும் தனியரை 04.10.2010 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு ஆணை வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**பே.சா.து.ந.க.எண்.பி5/3628/2010**
**ஆணையாளர் அவர்களின் 19.07.2011 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.199/2011 பொருள் எண்.10

**வயதுமுதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

ஆணையர் அவர்களின் 31.05.2011 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, திரு.எஸ்.என்.சங்கர், செயற் பொறியாளர், பே.சா.து. (பணிமாற்று அடிப்படையில் பணித்துறை) அவர்களை உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினரால் தெரிவிக்கப்படும் முன்பண நிலுவை தொகைகள், தணிக்கை தடை மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்புகள் ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின், அத்தொகையினை தனியரது ஓய்வுகால பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்கு உட்படுத்தி மற்றும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் தனியரை 31.05.2011 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார்.

தனியர் வகித்த பதவி சென்னை மாநகராட்சி பணியாளர் பிரிவு வகுப்பு 2ன் கீழ் வருவதால், தனியரது பணி ஓய்வுக்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

இது குறித்து தெரிவிப்பது யாதெனில், திரு.எஸ்.என்.சங்கர் அவர்கள் 07.05.1979 அன்று சென்னை மாநகராட்சியில் சூப்பர்வைஸர் பணியில் சேர்ந்துள்ளார். தனியர் 31.05.2011 அன்று 58 வயது பூர்த்தியடைந்து வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற வேண்டும். தனியர் வகித்து வந்த செயற் பொறியாளர் பதவியில் பணி வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், தனியர் மீதான தணிக்கை தடை நிலுவை, அலுவலக முன்பணம் நிலுவை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை நிலுவை ஏதும் உள்ளதா என தனியர் பணியாற்றிய துறைகள் மற்றும் மண்டலங்களுக்கு குறிப்பு அனுப்பப்பட்டது. தனியர் பணிபுரிந்த துறைகளிலிருந்து (கட்டடத் துறை. மழைநீர் வடிகால் துறை மற்றும் பேருந்து சாலைகள் துறை தவிர) தனியர் மீது பொறுபாக்கும் தணிக்கை தடை மற்றும் முன்பண நிலுவை ஏதும் இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியர் கட்டடத்துறையில் பணியாற்றிய காலத்தில் தனியரை பொறுப்பாக்கி 1990–91ல் பத்தி எண்.4–27, 4–35 மற்றும் 1991–92ல் பத்தி எண்.25 தணிக்கை தடை நிலுவையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மும்பை சென்று வந்ததற்காக வழங்கப்பட்ட முன்பண நிலுவை நேர்வு செய்யபட்டுள்ளதாக 15.07.2011 நாளிட்ட, பேருந்து சாலை துறை, செயற்பொறியாளர் அவர்களின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியர் மழைநீர் வடிகால் துறையில் பணிபுரிந்த காலத்தில் தனியரை கூட்டுப் பொறுப்பாக்கி 2001–2002ல் பத்தி எண்.29 மற்றும் 30ல் தணிக்கைத் தடை நிலுவையில் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியர் பேருந்து சாலைகள் துறையில் பணியாற்றிய காலத்தில் தனியரை கூட்டுப் பொறுப்பாக்கி 2007–08ல் பத்தி எண்.15, 20, 23, 24, 31, மற்றும் 34ல் தணிக்கை தடை நிலுவையில் உள்ளது.

மேலும், தனியர் மீது விழிப்பு துறையில் விசாரணை ஏதும் உள்ளதாயென கோரப்பட்டதில், விழிப்பு அலுவலர் 06.04.2011 நாளிட்ட விழிப்புக் குழுமத்தின் கடிதத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லையென குறிப்பிட்டுள்ளார்.

ஆகையால், திரு.எஸ்.என்.சங்கர், செயற் பொறியாளர், பேருந்து சாலைகள் துறை (பணிமாற்று அடிப்படையில் பணித்துறை) அவர்களை தணிக்கை தடை மற்றும் மாநகராட்சிக்கு இவரால் ஏற்பட்ட நிதி இழப்புகள் ஏதேனும் பின்னர் தெரியவரின், அதில் அடங்கிய தொகையினை இவரது பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்கு உட்படுத்தி, தனியரை 31.05.2011 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி அளிக்கப்பட்டதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>ம.அ.3.ந.க.எண்.அ1/10979/2010</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 20.07.2011 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.200/2011 பொருள் எண்.11

**<u>வயதுமுதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி</u>**

திரு. எஸ். சபாநாதன், உதவி செயற்பொறியாளர், மண்டலம்–3 அவர்கள் வயதுமுதிர்வு அடிப்படையில் 31.01.2011 அன்று ஓய்வு பெற்று, 10.04.2011 அன்று காலமானார். இவர் வகித்த பதவி வகுப்பு 2ன் கீழ் வருவதால் மாமன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு ஓய்வு பெற்ற இவரை மாமன்ற நியமனக்குழு மூலம் பணியிலிருந்து விடுவிப்பு பெற்றார்.

தனியர் 01.07.1975 அன்று சென்னை மாநகராட்சியில் சர்வேயராக பணியை துவக்கியுள்ளார். தற்போது உதவி செயற்பொறியாளராக 31.01.2011 அன்று 58 வயது பூர்த்தியடைந்து வயதுமுதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். அன்னாருக்கு ஓய்வூதியப் பணப்பயன்கள் வழங்க நடவடிக்கை மேற்கொண்ட நிலையில் தனியர் 10.04.2011 அன்று காலமாகி விட்டார். தனியர் வகித்து வந்த இளநிலை பொறியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலர் அவர்கள் 10.01.2011 நாளிட்ட மேற்குறிப்பில் தனியர் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு தெரிவிப்பது யாதெனில் தனியரின் பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்ததில இவ்வலுவலர் பணியாற்றிய மண்டலம் / அனைத்து துறைகளிலும் ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றச்சாட்டு விசாரணைகள் ஏதும் தற்போது நிலுவையில் இல்லை. மேலும் இத்துறையில் இவரை தனிப்பட்ட முறையில் பொறுப்பாக்கி தணிக்கைத் துறையால் தெரிவிக்கப்பட்ட நிதி இழப்பீடு ஏதுமில்லை. இவருக்கு வழங்கப்பட்ட மிகை ஊதியம் மற்றும் தணிக்கை தடைகளில் மாநகராட்சிக்கு இவரால் ஏற்பட்ட நிதி இழப்புகள் ஏதேனும் பின்னர் தெரியவரின் அவைகளை இவரது பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு இவரை 31.01.2011 அன்று முதல் வயதுமுதிர்வு ஓய்வு பெற மாமன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு அன்னார் ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டார்.

ஆகையால், திரு. எஸ். சபாநாதன், உதவி செயற்பொறியாளர், மண்டலம்–3 (ஓய்வு) அவர்கள் கடந்த 10.04.2011 அன்று காலமாகிவிட்டதால், அன்னாரின் வாரிசுதாரர் (மனைவி) திருமதி. கஸ்தூரி அவர்களுக்கு வழங்கபடவுள்ள ஓய்வுகால பணப்பயன்களில் தமிழ்நாடு ஓய்வூதிய விதி 1970ன் கீழ் விதி எண்.74(2)ன்படி, பிடித்தம் ஏதும் இன்றி வழங்கவும், 31.01.2011 அன்று பிற்பகல் முதல் வயதுமுதிர்வு ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு (நியமனக்குழு மூலம்) அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.ஏ1/0257/2011</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 16.07.2011 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.201/2011 பொருள் எண்.12

**<u>வயதுமுதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி</u>**

திரு. எஸ். ரெங்கராஜன், உதவி செயற்பொறியாளர், மழைநீர் வடிகால் துறை அவர்களின் வயதுமுதிர்வு நாள் 30.06.2011 ஆகும்.

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் திரு. எஸ். ரெங்கராஜன் அவர்கள் வகித்த உதவி செயற்பொறியாளர் பதவி வகுப்பு இரண்டின் கீழ் வருவதால் இப்பதவி வகிப்போர் பணி ஓய்வு பெற மாமன்றத்தின் அனுமதி பெறவேண்டும்.

இதன் பொருட்டு தெரிவிப்பது யாதெனில் திரு. எஸ். ரெங்கராஜன், உதவி செயற்பொறியாளர், நகர அமைப்பு பிரிவில் பணிபுரிந்த போது தடையில்லா சான்றிதழ் மற்றும் திட்ட அனுமதி ஆகியன வழங்கியதில் தவறுகள் செய்துள்ளதாக கண்டறியப்பட்டு தனியர் மீது தொடரப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு எவ்வித குந்தகமின்றியும் (Without prejudice to the Disciplinary proceedings pending against him) தணிக்கைத் தடைகள் மற்றும் மாநகராட்சிக்கு இவரால் ஏற்படும் நிதி இழப்பீடு இருப்பதாக பின்னர் தெரியவரின் அத்தொகையினை மற்றும் தண்டனையாக வழங்கப்பட்ட திரண்ட பயனின்றி மூன்று ஆண்டுகளுக்கான நிலுவைத் தொகை ஆகியன இவரது பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் இவரை 30.06.2011 அன்று பிற்பகல் முதல் வயதுமுதிர்வு பெற அனுமதிக்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலம் வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.க.கு.ந.க.எண்.அ8/1586/2011**
**ஆணையாளர் அவர்களின் 02.07.2011 நாளிட்ட குறிப்பு.**

தீர்மான எண்.202/2011 **பொருள் எண்.13**

**அரசாணை அமலாக்கம் – பின்னேற்பு அனுமதி**

05.05.2011 நாளிட்ட நிதி (கடன் மற்றும் முன்பணம்) துறையின் அரசாணை எண்.131, ல் மாநில அரசால் வழங்கப்படும் கடன் மற்றும் முன்பணத்திற்கான செலுத்த வேண்டிய வட்டி விகிதத்தை கீழ்கண்டவாறு நிர்ணயித்து ஆணையிடப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **கடன் / முன்பணம்** | **2010–11க்கான வட்டி விகிதம் (சதவீதத்தில்)** |
|---|---|---|
| **01.** | **மாநில அரசால் நிர்வகிக்கப்படும் தொழிற்சாலைகள் / வணிக நிறுவனங்கள்/ மாநகராட்சிகள் முதலியனவற்றுக்கு (நிதி கழகங்கள் அனைத்து உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் மாநகராட்சிகள் உட்பட) வழங்கப்படும் கடன்கள்.** | |
| | அ. வளர்ச்சிப்பணிக்கான திட்டங்கள் | 10.00 |
| | ஆ. மற்ற திட்டங்கள் | 11.00 |
| | இ. முதலீடு மற்றும் அபிவிருத்தி பணிகள் | 10.50 |
| | ஈ. மூலதன பணிக்கு ஆதாரமான தொகை | 13.50 |
| | உ. வழிவகைகளுக்கான முன்பணம், ரொக்கப் பற்றாக்குறையினை ஈடுசெய்ய வழங்கப்படும் கடன்கள் உள்ளிட்ட முன்பணம். | 12.00 |
| | ஊ. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலமாக பொது விநியோகத்திற்கான வழி வகைகளுக்கான முன்பணம் | 9.50 |
| **02.** | **கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் நில வள வங்கி போன்ற கூட்டுறவு வங்கிகளுக்கான கடன்கள்.** | 10.00 |
| **03** | **அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன்கள்** | |
| | **(1) வீடு கட்டும் முன்பணம்** | |
| | அ. ரூ. 50,000/– வரையுள்ள கடன்களுக்கு | 5.00 |
| | ஆ. ரூ. 50,001 முதல் 1,50,000 வரையுள்ள கடன்களுக்கு | 6.50 |
| | இ. ரூ. 1,50,001 முதல் 5,00,000 வரையுள்ள கடன்களுக்கு | 8.50 |
| | ஈ. ரூ. 5,00,000 –க்கு மேல் | 9.50 |
| | **(2) வாகனம் வாங்க வழங்கப்படும் முன்பணம்** | |
| | அ. மோட்டார் கார் வாங்குவதற்கு | 11.50 |
| | ஆ. மோட்டார் சைக்கிள்/ஸ்கூட்டர் வாங்குவதற்கு | 8.00 |
| | இ. மிதிவண்டி | 5.50 |
| | **(3) அரசு ஊழியர் கடன் மற்ற தனி நபர் கடன்கள்** | |
| | அ. கணினி வாங்குவதற்கு | 10.00 |
| | ஆ. மற்றவைகள் | 10.00 |
| **04** | **பிற வகைகள்:–** | |
| | மேலே குறிப்பிட்ட எந்த பிரிவகளிலும் சேராத மற்ற கடன்கள் | 12.00 |
| **05** | **இன்றியமையா பொருள்கள் சட்டம் 1955ன் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பிற்கு** | 6.50 |
| **06** | **அபராத வட்டி** | 2.50 |

எனவே, 05.05.2011 நாளிட்ட நிதி (கடன் மற்றும் முன்பணம்) துறை, அரசாணை எண். 131–ஐ சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தியதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘21.07.2011 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 97 /2011 நாள் 21.07.2011–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**க. து. ந. க. எண். அ2 / 5383 / 2010**
**ஆணையர் அவர்களின் 08.07.2011 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.203/2011 **பொருள் எண்.14**

**கல்வித்துறை – சென்னை பள்ளிகளில் பயிலும் 6ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவ / மாணவிகளுக்கு இலவசமாக வடிவியல் பெட்டி (Geometry Box) வழங்க ஒப்பம் கோரப்பட்டு – திரு. ஆர். மதுசூதனன் என்ற நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது – மன்றத்தின் பின்னேற்பு அனுமதி .**

******

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2010–11 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், பக்க எண். 9, பொருள் 18ல் கணித பாடத்தில் வடிவியியல் (Geometry Box) பிரிவிலும் அறிவியல் பாடத்திலும் உள்ள படங்கள் வரைந்து பாடங்கள் நன்கு விளங்கி தேர்ச்சி பெறும் நோக்கத்தோடு 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் 48,043 மாணவ/ மாணவியர்களுக்கு வடிவியல் உபகரண பெட்டிகள் (Geometry Box) இலவசமாக வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

இத்திட்டத்தினை செயல்படுத்தும் வகையில் 2010–2011 ஆம் ஆண்டு, சென்னை பள்ளிகளில் 6ஆம்வகுப்பு முதல் 10ஆம்வகுப்பு வரை பயிலும் 48,043 மாணவ/ மாணவியர்களுக்கு இலவசமாக வடிவியல் பெட்டி (Geometry Box) வழங்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வடிவியல் பெட்டி வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| **சென்னை நடுநிலைப்பள்ளிகளின் மாணவ / மாணவிகளின் எண்ணிக்கை** | 6 ஆம் வகுப்பு = | 3,179 |
| | 7 ஆம் வகுப்பு = | 3,120 |
| | 8 ஆம் வகுப்பு = | 3,131 |
| **சென்னை உயர்நிலைப்பள்ளிகளின் மாணவ / மாணவிகளின் எண்ணிக்கை** | 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை = | 13,071 |
| **சென்னை மேல்நிலைப்பள்ளிகளின் மாணவ / மாணவிகளின் எண்ணிக்கை** | 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை = | 25,542 |
| | **மொத்தம்** | **48,043** |

எனவே,

(அ 2010–2011ஆம் கல்வி ஆண்டில் செயல்படுத்தும் விதமாக சென்னை பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு இலவசமாக வடிவியல் பெட்டி (Geometry Box) வழங்கப்பட்டுள்ளதற்கும்,

(ஆ) ஒரு வடிவியல் பெட்டியின் விலை ரூ.23.65/– வீதம் 48,043 மாணவ / மாணவியர்களுக்கு 23.65 x 48,043 = ரூ. 11,36,217/– தொகையில் வடிவியல் பெட்டி (Geometry Box) வழங்கப்பட்டுள்ளதற்கும்,

(இ) இச்செலவினத்தை **E-F4-80-82-01** என்ற கணக்குத் தலைப்பின் கீழ் கணக்கு குறியீட்டு எண். **DP- 230 – 11 – 01 - 01** உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளதற்கும்,

(ஈ) ஆர்.மதுசூதனன்–என்ற நிறுவனத்திற்கு கொள்முதல் செய்யப்பட்டதற்கு அத்தொகைக்கான காசோலை வழங்கப்பட்டுள்ளதற்கும்,

நிலைக்குழுக்கள் (கல்வி), (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘13.7.2011 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.18/2011, நாள் 13.7.2011–ன்படி இதற்கு நிலைக்குழு(கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமாப்பிக்கப்படுகிறது.’’

‘‘21.07.2011 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 101/2011 நாள் 21.07.2011–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ3/20965/2011</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 20.07.2011 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.204/2011 பொருள் எண்.15

**<u>இணை ஆணையர் (கல்வி) பொறுப்பேற்ற விவரம்</u>**

அரசாணை (நிலை) எண். 2148, பொது (சிறப்பு – அ) துறை, நாள் 21.06.2011ன் படி, திரு.தி.ந. வெங்கடேஷ், இ.ஆ.ப., இணை ஆணையர், வணிக வரிகள் (நிர்வாகம்), அவர்கள், சென்னை மாநகராட்சியில் இணை ஆணையர் (கல்வி) ஆக 27.06.2011 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவலுக்காகவும், பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது''

‘‘இதனை மன்றம் பதிவு செய்கின்றது’’

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ3/21056/2011</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 20.07.2011 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.205/2011 பொருள் எண்.16

**<u>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பொறுப்பேற்ற விவரம்</u>**

அரசு ஆணை (வாலாயம்) எண். 135, தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்வாகம்–1)த்துறை, நாள் 22.06.2011ன் படி, திரு. சிவ.சு. சரவணன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள், சென்னை மாநகராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக 27.06.2011 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவலுக்காகவும், பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது''

‘‘இதனை மன்றம் பதிவு செய்கின்றது''

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண். பி5/0573/2010</u>**

**<u>ஆணையர் அவர்களின் 16.07.2011 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்.206/2011** பொருள் எண். 17

## ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் நடைபெறும் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிக்கு பணி கால நீட்டிப்பு

சென்னை மாநகரில் 2870 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைகள் உள்ளன. அதில் 944 கிலோ மீட்டர் நீளத்திற்கு மட்டும் மழைநீர் வடிகால்வாய்கள் உள்ளன. சென்னை மாநகரம் சமதள நிலப்பகுதியாக இருப்பதாலும் மற்றும் மழைநீர் வடிகால்வாய்கள் பழைமை வாய்ந்ததாக இருப்பதாலும் போதிய நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய்கள் இல்லையாதலாலும் மழைக்காலங்களில் சாலைகளில் மழைநீர் தேங்குவது வழக்கமாக இருந்து வருகிறது.

சாலைகளில் மழைநீர் தேங்குவதை தவிர்க்கும் வகையில் சென்னை மாநகராட்சி பொதுப்பணித்துறையுடன் இணைந்து விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசால் ஜவஹர்லால் நேரு தேசிய நகரப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் அனுமதி பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் வடக்கு, மத்திய, கிழக்கு, தெற்கு ஆகிய 4 நீர்த்தேக்கப் பகுதிகளாக பிரித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மழைநீர் தேங்குவதை பெருமளவு குறைப்பதற்கான ஒருங்கிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பிரதான அம்சங்களும் மற்றும் செலவினங்களும் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | நீர்த்தேக்கப் பகுதியின் பெயர் | சென்னை மாநகராட்சி பங்கு ரூ. (கோடியில்) | பொதுப்பணித்துறை பங்கு ரூ. (கோடியில்) | அனுமதிக்கப்பட்ட தொகை ரூ. (கோடியில்) | CSMC, JNNURM, GOI அனுமதி வழங்கிய நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | வடக்கு | 277.17 | 82.69 | 359.86 | 19.12.2008 |
| 2 | மத்திய | 261.11 | 83.89 | 345.00 | 29.12.2008 |
| 3 | கிழக்கு | 140.40 | 303.67 | 444.07 | 14.01.2009 |
| 4 | தெற்கு | 136.20 | 162.78 | 298.98 | 22.01.2009 |
| | **மொத்தம்** | **814.88** | **633.03** | **1447.91 (அ) 1448.00** | |

திட்ட அறிக்கையின்படி, மூன்று ஆண்டுகளில் படிப்படியாகக் கால்வாய் மேம்பாட்டுப் பணிகளும், மழைநீர் வடிகால்வாய் பணிகளும் இந்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். அனுமதிக்கப்பட்ட மொத்தத் தொகையில் மத்திய அரசு 35 விழுக்காடு, மாநில அரசு 15 விழுக்காடு மற்றும் சென்னை மாநகராட்சி 50 விழுக்காடுகளாகும்.

மேலும் சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 814.88 கோடி தொகைக்கு அரசின் நிர்வாக அனுமதி 06.07.2009 அன்று பெறப்பட்டு 12 நீர்த்தேக்கப் பகுதிகளுக்கு, ரூ.774.60 கோடி தொகைக்கான ஒப்பந்தங்கள் பெறப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு 12 நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் பணிகள் நடைபெறுகிறது.

திருவாளர்கள். லேண்ட் மார்க் கார்பரேஷன் அவர்களுக்கு 28.06.2010 அன்று கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிகளுக்குரிய பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் தலைமையில் **06.09.2010** நடைபெற்ற வட கிழக்கு பருவ மழைக்கு முன் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கான அரசின் அனைத்து துறைகளுக்கான கலந்தாய்வு கூட்டத்தில் பொது மக்களுக்கு மழை வெள்ளத்தால் எவ்வித இடர்பாடுகள் ஏற்படாத வண்ணம் புதியதாக சாலை வெட்டுகள் எதுவும் மேற்கொள்ள கூடாது என முடிவெடுக்கப்பட்டது.

சென்னை வானிலை ஆராய்ச்சி மையத்தில் பதிவான ஜூன் **2010** முதல் டிசம்பர் **2010** வரையிலான தினசரி மழையளவு விவரம் பெறப்பட்டுள்ளது. இதனால் கடந்த ஆக்ஸ்ட் **2010** முதல் டிசம்பர் **2010** வரை **5** மாதங்கள் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படவில்லை. மேலும் மார்ச் **2011** முதல் மே **2011** வரை தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நடத்தை விதி அமுல்படுத்தியதால் **3** மாதங்களுக்கு பணி மேற்கொள்ளப்படவில்லை.

ஒப்பந்ததாரர் **25.05.2011** நாளிட்ட கடிதத்தில் தாங்கள் செய்து முடிக்க வேண்டிய கால அளவுகள் (Mile Stone) செய்து முடிக்கப்படவில்லை என்றும் மேலும் **12** மாத கால நீட்டிப்பு வேண்டியுள்ளார்கள்.

இது சம்பந்தமாக தெரிவித்துக் கொள்வது யாதெனில், இச்சமுதாய நலக்கூடத்தின் வாடகை நவீனமயமாக்கப்படுவதற்கு முன் நாளொன்றுக்கு ரூ.3,000/– என்றும், அரை நாள் ஒன்றுக்கு ரூ.1,500/– என்றும் சேவைக் கட்டணமாக 12.24 சதவிதமும், மின்கட்டணம் ரூ.7/– ஒரு யூனிட் வீதம் வசூலிக்கப்பட்டு வந்தது. இது தவிர வாகனம் நிறுத்துவதற்கென்று சுமார் 2000 சதுர அடி பரப்பளவு இடம் விடப்பட்டுள்ளது. தற்பொழுது மேற்படி சுற்றுவட்டார இடத்திற்கு சொத்து வரி மதிப்பீடு (வணிக உபயோகம்) சதுர அடிக்கு ரூ.3/– வீதம் வசூலிக்கப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 5712 சதுர அடிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.17,136/– என்றால் வருடத்திற்கு ரூ.2,05,632/– ஆகும். வருடத்திற்கு 50 நிகழ்ச்சிகள் கணக்கில் கொண்டு நிகழ்ச்சி ஒன்றுக்கு ரூ.4,113/– ஆகவும், அரை நாள் ஒன்றுக்கு ரூ.2,057/– என்றும், இத்துடன் நிகழ்ச்சி நாளன்று ஏற்படும் குப்பையை அகற்ற தனியார் நிறுவனம் மூலம் குப்பைக் கொட்டும் (Dumping Ground) வளாகத்திற்கு எடுத்துச் செல்ல டன் ஒன்றிற்கு ரூ.774/– என்பதை தொகை சுழிக்கப்பட்டு (Rounded off) ரூ.787/– என்றும், நாள் ஒன்றுக்கு மண்டப வாடகை மற்றும் குப்பை அகற்றும் பணிக்கு சேர்த்து ரூ.4900/– அரை நாள் ஒன்றுக்கு மண்டப வாடகை மற்றும் குப்பை அகற்றும் பணிக்கு சேர்த்து ரூ.2,450/– என்று வசூலிக்கவும், இது தவிர சேவை வரியாக ( Service Tax) தற்சமயம் 12.24 சதவிதம் வசூலிக்கப்பட்டு வருகிறது. அதனை பின்னர் காலத்திற்கேற்றாற்போல் உயர்த்தி நிர்ணயம் செய்யலாம் என்றுத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, தற்பொழுது நவீனமயமாக்கப்பட்டு தயார் நிலையில் உள்ள சமுதாய நலக்கூடத்தின் கட்டிடத்தின் அளவு தரை தளம் 3025 சதுர அடி, முதல் தளம் 2687 சதுர அடி மொத்த 5712 சதுர அடி ஆகும். இச்சமுதாய நலக்கூடத்தினை பொது மக்களின் அன்றாட சுப நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்திக் கொள்ள மண்டலம்–7 வார்டு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு தீர்மானம் பெறப்பட்டது.

எனவே, மாநகராட்சிக்கு சொந்தமான பகுதி–19, கோட்டம்–103, நேவல் ஆஸ்பத்திரி சாலை, பெரியமேட், சென்னை–3இல் அமைந்துள்ள சமுதாய நலக்கூடம் (Community Hall) கட்டிடம் புதுப்பிக்கும் பணி முடிந்து பொது மக்களின் நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்திக் கொள்ளவும்,

தரை தளம் 3025 சதுர அடி மற்றும் முதல் தளம் 2687 சதுர அடி மொத்தம் 5712 சதுர அடியுள்ள சமுதாய நலக்கூடத்திற்கு சதுர அடி ரூ.3/— வீதம் 5712 சதுர அடிக்கு நாள் ஒன்றிற்கு மண்டப வாடகை மற்றும் குப்பை அகற்றும் பணிக்கு சேர்த்து ரூ.4,900/— எனவும், அரை நாள் மண்டப வாடகை மற்றும் குப்பை அகற்றும் பணிக்கு சேர்த்து ரூ.2,450/— என வசூலிக்கவும், இது தவிர சேவை வரியாக (Service Tax) தற்சமயம் 12.24 சதவிதம் மற்றும் மின்கட்டணம் யூனிட் ஒன்றுக்கு ரூ.10/— வீதம் நிகழ்ச்சி உபயோகிப்பவரின் மின் நுகர்வை பொருத்து (as per metre Reading) மின் கட்டணம் வசூலிக்கவும்,

நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.07.2011 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 120 /2011 நாள் 21.07.2011—ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.8.வ.துந.க.எண்.ஆர்3/2276/2011.**
**ஆணையாளர் அவர்களின் 20.07.2011 நாளிட்ட குறிப்பு.**

தீர்மான எண்.221/2011 **பொருள் எண்: 32**

**புதிதாக கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடம் வாடகை நிர்ணயம் செய்ய ஒப்புதல்**

* * * * *

மண்டலம் 8, கோட்டம்–116 உதவி செயற்பொறியாளர் அவர்கள் புதியதாக கட்டப்பட்டுள்ள சென்னை மாநகராட்சி பல்நோக்கு கட்டிடத்தை உதவி வருவாய் அலவலர்–8 அவர்களிடம் ஒப்படைப்பு செய்ய உள்ளார்.

வரிமதிப்பீட்டாளர், கோட்டம்–116 அவர்கள் புதியதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிடத்திற்கு உதவி செயற் பொறியாளர் –8/பகுதி–22 அவர்களின் 04.07.2011 நாளிட்ட கடிதத்தின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்துள்ளார்.

மண்டலம்–8, கோட்டம்–116 சத்திய மூர்த்தி நகரில் அமைந்துள்ள புதியதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிட பரப்பளவு 995 சதுர அடி என உதவி செயற்பொறியாளர் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள அளவின் அடிப்படையில் மன்ற தீர்மான எண்.553/2000, நாள்:24.08.2000–ன் தீர்மானத்தின்படி ஓர் ஆண்டிற்கான சராசரி விழாக்கள் 40 என கணக்கீடு செய்து வாடகை கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

**பரப்பளவு X வீதம் X 12 மாதம் / வருட விழாக்களின் சராசரி எண்ணிக்கை**

இப்பொருள் குறித்து 14.07.2011 அன்று நடந்த வார்டு குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனடிப்படையில் சதுர அடி ஒன்றிற்கு ரூ.4.05 பைசா வீதம் ஒருநாள் வாடகை (24 மணி நேரம்) ரூ.1209/– மற்றும் சேவை வரி ரூ.151/– எனவும் 8 மணி நேரத்திற்கு ரூ.403/– மற்றும் சேவை வரி ரூ.50/– எனவும் நிர்ணயம் செய்ய நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘21.07.2011 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 121 / 2011 நாள் 21.07.2011–ன்படி, சதுர அடி ஒன்றிற்கு ரூ.4.05 பைசா என்பதற்கு பதிலாக தீர்மான எண்.553 / 2000, நாள்: 24.8.2000 அன்றைய மன்ற தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள ரூ.1.50 பைசா என்று நிர்ணயித்து, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.8.ந.க.எண்.அ1/ 4660 /2011**
**ஆணையாளர் அவர்களின் 16.07.2011 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.222/2011 பொருள் எண்.33

**மண்டலம்–8ல் வார்டு–129ல் அலுவலக வளாகத்தில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு ஒரு அறையினை தற்காலிகமாக ஒதுக்குவதற்கு அனுமதி**

| **வார்டு எண்.129** | **மண்டலம்–8** |
|---|---|
| விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்காக தற்காலிகமாக அறை ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ள அலுவலகத்தின் விவரம் | வார்டு–65ல் கதவு எண்.77, காமராஜ் சாலை, விருகம்பாக்கம் இடத்தில் புதிய சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டித்தர தேவையான விண்ணப்பம் அளித்துள்ளதால் அதுவரை வார்டு–129 அலுவலக வளாகத்தில் ஒரு அறையினை தற்காலிகமாக ஒதுக்க அனுமதி வேண்டுதல். |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண் மற்றும் நாள் | வார்டு குழு தீர்மான எண்.164, நாள்.14.07.2011 |

எனவே, மண்டலம்–8, வார்டு–129 அலுவலக வளாகத்தில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்காக தற்காலிகமாக ஒரு அறையினை ஒதுக்குவதற்கு நிலைக்குழு வரிவிதிப்பு (ம) நிதி மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘21.07.2011 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 117 /2011 நாள் 21.07.2011–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**மி. து.ந.க.எண்,சி.மே2/ பி1/ 3969 /2011**
**ஆணையாளர் அவர்களின் 20.07.2011 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.223/2011 **பொருள் எண்.34**

**மண்டலம்–3 முதல் 8 வரை மற்றும் மண்டலம்–10 இல் 40 வாட் எல்.இ.டி. பிட்டிங்குகளுடன் கூடிய தெருவிளக்குகள் வடிவமைத்து, வழங்கி, நிறுவி சோதனை செய்து மற்றும் இயக்கி வைக்கும் பணிக்கு அனுமதி வேண்டுதல்**

| | | |
|---|---|---|
| 1 | செய்ய வேண்டிய பணி / கொள்முதல் செய்ய வேண்டிய பொருள் | 1186 எண்ணிக்கையில் 40 வாட் எல்.இ.டி. பிட்டிங்குகளுடன் கூடிய தெருவிளக்குகள் வடிவமைத்து, வழங்கி, நிறுவி சோதனை செய்து மற்றும் இயக்கி வைக்கும் பணி– மண்டலம் 3 முதல் 8 வரை மற்றும் மண்டலம் 10 பல்வேறு இடங்களில் |
| 2 | மதிப்பீடு | ரூ. 2,83,40,147/- |
| 3 | தேவைப்படும் இடம் | மண்டலம் 3 முதல் 8 வரை மற்றும் மண்டலம் 10 பல்வேறு இடங்களில் |
| 4 | மின் பண்டக சாலையின் இருப்பு | இல்லை |
| 5 | ஒப்ப அறிவிப்பு பிரசுரிக்கப்பட்ட தேதி | 15.07.2011 |
| அ | மாநகராட்சி ஒப்பந்த மலரில் வெளியிட்ட நாள் | 23.06.2011 |
| ஆ | மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் வெளியிட்ட நாள் | 23.06.2011. |
| இ | பத்திரிக்கைகளில் வெளியிட்ட நாள் | 23.06.2011 தினத் தந்தி, 23.06.2011 Deccan Chronicle |
| 6 | ஒப்ப முன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்ற நாள் மற்றும் விபரங்கள் | 06.07.2011 (17 ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர் அவர்கள் கோரிய விவரங்கள் குறித்து நடவடிக்கை குறிப்பு தயாரிக்கப்பட்டு இணையதளம் மூலம் அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது) |
| 7 | ஒப்ப நமூனா விற்பனைக்கான இறுதி நாள் | 13.07.2011 |
| 8 | ஒப்பம் செய்திதாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டதா | ஆம் |
| 9 | ஒப்பப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் (ஒப்பம் திறக்கப்பட்ட நாள்) | 15.07.2011 |
| 10 | விற்பனை செய்யப்பட்ட ஒப்ப நமூனாக் களின் எண்ணிக்கை | ஏதும் இல்லை |
| 11 | பெறப்பட்ட ஒப்பங்களின் எண்ணிக்கை | 9<br>(e-submission மூலம் எந்த ஒரு ஒப்பந்த புள்ளியும் பெறப்படவில்லை) |
| 12 | செலுத்தப்பட்ட ஒப்ப வைப்பத் தொகை | **ரூ. 2,83,500 / –** |

| 13 | **ஒப்பத்தில் பங்கேற்ற நிறுவனங்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் குறித்த விவரங்கள்** | |
|---|---|---|
| | நிறுவனம் | தொழில்நுட்ப ஆவணங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்ட விவரம் |
| 1 | M/s Crompton Greaves Ltd., | Manufacturer. Bank Guarantee produced. Sample tested. **Technical bid qualified.** |
| 2 | M/s GE India Industrial Pvt Ltd, | Manufacturer. EMD enclosed. Sample tested. **Technical bid qualified.** |
| 3 | M/S Kripa Telecom, | Manufacturer. NSIC registration. Not completed similar type of work (LED lighting) of not less than 50% of Value of work. **Technical bid not considered** |
| 4 | M/s Mamta Products, | Manufacturer. NSIC registration .Not completed similar type of work (LED lighting) of not less than 50% of Value of work. **Technical bid not considered** |
| 5 | M/s MIC Electronics Ltd., | Manufacturer. Bank Guarantee produced. Sample tested. **Technical bid considered** |
| 6 | M/s Sabhari Electricals, | Dealer of Agastya Pvt Ltd and Bajaj Electricals. Samples tested. **Option -1** Bajaj Electricals, tender sample satisfactory. **Option -2** Agastya Pvt Ltd, Tender sample not as per Tender Specifications**.** Option-1 Technical bid considered. |
| 7 | M/s Sanarti signals Pvt Ltd., | Only Xerox copies of all documents enclosed in tender.<br>**Technical bid not qualified.** |
| 8 | M/s Texonic Instruments, | Authorised distributor of M/s Shanxi Guangyu. Sample tested. Tender sample not as per Tender Specifications**. Technical bid not qualified.** |
| 9 | M/s Thorn Lighting India Pvt.Ltd., | Manufacturer. EMD enclosed. Sample tested. **Technical bid considered** |
| 14 | **தொழில் நுட்ப ஆவணங்களில் தேர்வு பெற்ற நிறுவனங்கள்**<br>1) M/s Crompton Greaves Ltd.,<br>2) M/s GE India Industrial Pvt Ltd,<br>3) M/s MIC Electronics Ltd.,<br>4) M/s Sabhari Electricals,<br>5) M/s Thorn Lighting India Pvt.Ltd.,<br>நிறுவனத்தின் **நிதி ஆவணம்** 20.07.2011 அன்று திறக்கப்பட்டன. | |

| 15 | **ஒப்பத்தில் பங்கேற்ற நிறுவனங்களின் ஒப்பத் தொகை விவரங்கள்** | |
|---|---|---|
| | ஒப்பத்தில் பங்கேற்ற நிறுவனத்தார். | மொத்த ஒப்பத் தொகை |
| | M/s Crompton Greaves Ltd., | Rs.2,11,63,842/- **(–) 25.32**% |
| | M/s GE India Industrial Pvt Ltd, | Rs.2,78,43,080/- (-) 1.75% |
| | M/s MIC Electronics Ltd., | Rs.1,93,40271/- (-)31.756% |
| | M/s Sabhari Electricals, | Rs.2,35,61,640/- (-)16.86% |
| | M/s Thorn Lighting India Pvt.Ltd., | Rs.2,40,91,897/- 9-)14.99% |
| | குறைந்த ஒப்ப புள்ளி அளித்த நிறுவனம் | M/s MIC Electronics Ltd., நிறுவனம் குறைந்த ஒப்ப புள்ளி அளித்துள்ளது |

| | | |
|---|---|---|
| **16** | கூடுதல் பிணை வைப்புத் தொகை | ரூ. 45,00,000 / Bank Guarantee enclosed. |
| **17** | துறையால் விலை குறைப்பு கேட்கப்பட்ட விவரம் | M/s MIC Electronics Ltd., நிறுவனம் 20.07.2011 நாளிட்ட அன்றே அளித்த கடிதம் மூலம் மேலும் குறைக்க இயலாது என தெரிவித்துள்ளது |
| 18 | முந்தைய கொள்முதல் விவரம் | 40 வாட் எல்.இ.டி. பிட்டிங்குகளுடன் கூடிய தெருவிளக்குகள் வடிவமைத்து, வழங்கி, நிறுவி சோதனை செய்து மற்றும் இயக்கி வைக்கும் பணி ஒன்று ரூ. 24,529 / – (ஆயத்தீர்வை மற்றும் வரிகள் உள்ளிட்டது ) , 40 வாட் எல்.இ.டி. பிட்டிங்குகள் வழங்கி, நிறுவி சோதனை செய்து மற்றும் இயக்கி வைக்கும் பணி ஒன்று ரூ. 17,950 / (ஆயத்தீர்வை மற்றும் வரிகள் உள்ளிட்டது ) வீதம் 16.06.2011 நாளிட்ட ஆணை மூலம், M/s Philips Electronics India Limited வழங்கப்பட்டுள்ளது. |

| Sl.No | விவரம் | M/s Philips Electronics India Limited., Rs. | M/s MIC Electronics Ltd., Rs. | கடந்த கொள்முதல் விலையை விட % குறைவு |
|---|---|---|---|---|
| 1 | 40 வாட் எல்.இ.டி. பிட்டிங்குகளுடன் கூடிய தெருவிளக்குகள் வடிவமைத்து, வழங்கி, நிறுவி சோதனை செய்து மற்றும் இயக்கி வைக்கும் பணி | ரூ. 24,529 / | ரூ. 20,796 / | (–) 15.22 % |
| 2 | 40 வாட் எல்.இ.டி. பிட்டிங்குகள் வழங்கி, நிறுவி சோதனை செய்து மற்றும் இயக்கி வைக்கும் பணி | ரூ. 17,950 / | ரூ. 10,845 / | (–) 39.58 % |

| | | | |
|---|---|---|---|
| 19 | **பரிந்துரைக்கப்படும் நிறுவனம்**<br>M/s MIC Electronics Ltd., நிறுவனத்தின் குறைந்த ஒப்பப்புள்ளி ரூ. 1,93,40,271/- (ஆயத்தீர்வை மற்றும் வரிகள் உள்ளிட்டது ) ஏற்பதற்காக பரிந்துரைக்கப்படுகிறது | | |
| 20 | **பரிந்துரைக்கப்படும் நிறுவனத்தின் விவரம்** | | |
| 21 | செல்லத்தக்க காலம் | : | 90 நாட்கள் |
| 22 | ஆயத் தீர்வை | : | உள்ளிட்டது |
| **23** | உள்ளூர் வரிகள்/மத்திய விற்பனை வரிகள் | : | உள்ளிட்டது |
| **24** | பணி முடிக்கும் காலம் | : | 6 மாதங்கள்(180 நாட்கள்) |

| | | | |
|---|---|---|---|
| 25 | பிணை வைப்புத் தொகை | : | ரூ.3,87,000/– |
| 26 | பணம் பட்டுவாடா | : | Payment of 80% of the bill value for the quantum of work completed as per the measurements recorded in the M book will be made within 30 days from the date of completion, 15% will be released after handing over of the installation and the balance 5% will be released after the defects liability period. |
| 27 | உத்திரவாதம் | : | 7 years for LED luminaire, 1 year for entire installation |
| 28 | செலவினம் பற்று வைத்தல் | : | JNNURM SCHEME – BSUP PHASE-II |
| 29 | உடன்படிக்கை | துறையில் குறிப்பிடப்பட்ட படிவத்தில் கொள்முதல் ஆணை பெறப்பட்ட 7 தினங்களுக்குள் செய்து கொள்ள வேண்டும். | |

**M/s MIC Electronics Ltd., நிறுவனத்தின் குறைந்த ஒப்பப்புள்ளி ஏற்பதற்காக பரிந்துரைக்கப்படுகிறது**

எனவே,

1. 1186 எண்ணிக்கையில் 40 வாட் எல்.இ.டி. பிட்டிங்குகளுடன் கூடிய தெருவிளக்குகள் வடிவமைத்து, வழங்கி, நிறுவி சோதனை செய்து மற்றும் இயக்கி வைக்கும் பணி– மண்டலம் 3 முதல் 8 வரை மற்றும் மண்டலம் 10 பல்வேறு இடங்களில் ரூ. 1,93,40,271/ – (–) 31.756 % குறைந்த ஒப்பப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பத்தை ஏற்கவும் ரூ.1,93,40,271/ –(ஆயத்தீர்வை உள்ளிட்டது, வரிகள் உள்ளிட்டது) தொகைக்கு கொள்முதல் மற்றும் பணி ஆணை வழங்கவும்;
2. இந்த கொள்முதலுக்கான செலவினத்தை JNNURM SCHEME – BSUP PHASE-II ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளவும்.

நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது

"இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.07.2011 அன்று தீர்மான எண். 106/2011–ன் படி நிலைக்குழு (பணிகள்)–வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)–வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"21.07.2011 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 122 /2011 நாள் 21.07.2011–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>மா.கு.ந(ம) ம.கு.ந.க.எண்.பி10/1682/11</u>**
**<u>அணையர் அவர்களின் 14.06.2011 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.224/2011 பொருள் எண்.35

**மாவட்ட குடும்ப நலத்துறை – 24 மணி நேர மருத்துவ மனைகளில் அவசர காலங்களில் தனியார் மருத்துவர்களை அழைத்து மதிப்பூதியம் அடிப்படையில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளுதல் – 2010–11 ஆண்டில் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது – தொடர்ந்து நடப்பு நிதியாண்டு 2011–12ற்கு தேவைப்படும் நிதியினை ஒதுக்க அனுமதி.**

*********

மாவட்ட குடும்ப நலத்துறையின் 10 மண்டலங்களின் கீழ் இயங்கும் 24 மணி நேர மருத்துவமனைகளின் அறுவை அரங்குகள் மற்றும் பிரசவ மையங்களில் மாநகராட்சியின் அறுவை சிகிச்சை நிபுணர்கள் மற்றும் மயக்க மருந்து அளிக்கும் மருத்துவர்கள் மூலமாக பிரசவங்களும் மற்றும் அறுவை சிகிச்சையும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் உயர்ந்து வரும் பிரசவங்கள் மற்றும் அறுவை சிகிச்சைக்கு ஏற்றவாறு மாநகராட்சி மருத்துவமனை வசதிகளை மேம்படுத்தியும் மற்றும் புதிய மருத்துவர்களை நியமித்தும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வகையில் செயல்பட்டு வரும்பொழுது பல சமயங்களில் போதிய சிறப்பு மருத்துவர்கள் இல்லாததால், அவசர பிரசவ மற்றும் அறுவை சிகிச்சைகளை அரசு மருத்துவமனைகளுக்கு பரிந்துரை செய்யாமல் மாநகராட்சி மருத்துவமனை களிலேயே சிகிச்சை அளிக்க , தனியார் சிறப்பு அறுவை மற்றும் மயக்க மருந்து நிபுணர்களை மதிப்பூதியம் அடிப்படையில் அழைத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு தனியார் மருத்துவர்களை மதிப்பூதியம் அடிப்படையில் அமர்த்தி அவசர காலங்களில் சிகிச்சை மேற்கொள்ள இயக்குநர், பேறுசார் குழந்தைகள் திட்ட அலுவலகம், சென்னை–06 மூலமாக ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட நிதி (25 இலட்சம்) வழங்கப்படுகிறது. இவ்வகையில் பெறப்படும் நிதி மாநகராட்சி மருத்துவமனைகளில் தனியார் மருத்துவர்களை மதிப்பூதியம் அடிப்படையில் அமர்த்தி அறுவைச் சிகிச்சை செய்ய போதுமானதாக இல்லாதததினால், மாநகராட்சியின் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்ய கோரப்பட்டு , 2010–11 நிதியாண்டில் ஆணையரின் அனுமதியுடன் 45 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு செய்யப்பட்டது. இதற்கு மாமன்றத்தின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

2010 –11 ஆண்டின் ஒதுக்கீடு மற்றும் செலவு விவரம்–

| எண் | மதிப்பூதியம் விவரம் | ( லட்சங்கள்) |
|---|---|---|
| 1 | 2010 –11 ஆண்டிற்காக அரசு வழங்கிய தொகை (36 இலட்சம் + 18 இலட்சம்) | 54.00 |
| 2 | **2009 –10** ஆண்டில் ஏற்பட்ட கூடுதல் செலவினை நேர்செய்த வகையில் | 36.00 |
| | மீதம் | 18.00 |
| | 2010 –11 மாநகராட்சி ஒதுக்கீடு செய்த தொகை | 45.00 |
| | 2010 –11 ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு | 63.00 |
| | 2010 –11 ஆண்டில் மதிப்பூதியம் அளித்த வகையில் செலவுத் தொகை (தோராயமாக) | 62.23 |
| | 2010–11 ஆண்டின் மீதம் (தோரராயமாக) | 00.76 |

மாநகராட்சியின் மருத்துவமனைகளில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மதிப்பூதியம் அடிப்படையில் அறுவை சிகிச்சை மேற்கொள்ள ஏற்பட்ட மொத்த செலவுத் தொகையும் மற்றும் 2011–12 ஆண்டிற்குத் தோராயமாக தேவைப்படும் நிதி பற்றிய விவரமும்.

| எண் | விவரம் | மொத்த செலவினம் ( லட்சங்கள்) |
|---|---|---|
| 1 | 2009 –10 மொத்த செலவினம் | 52.71 |
| 2 | 2010 –11 மொத்த செலவினம் | 62.23 |
| | 2011–12 ஆண்டிற்கு மதிப்பூதியம் வழங்க தோராயமாக தேவைப்படும் தொகை | **65.00** |
| | 2011–12 ஆண்டிற்கு அரசிடமிருந்து தோராயமாக எதிர்ப்பார்க்கப்படும் தொகை | **25.00** |
| | மாநகராட்சியிடமிருந்து கோரப்படும் தொகை | **40.00** |

எனவே நடப்பு நிதியாண்டிற்கு (2011–12) மாவட்ட குடும்ப நலத்துறையின்10 மண்டலங்களின் கீழ் இயங்கும் 24 மணி நேர மருத்துவமனைகளின் அறுவை அரங்குகள் மற்றும் பிரசவ மையங்களில், அவசர பிரசவ மற்றும் அறுவை சிகிச்சைகளை அரசுமருத்துவமனைகளுக்கு பரிந்துரை செய்யாமல் மாநகராட்சி மருத்துவமனைகளிலேயே சிகிச்சை அளிக்க, தனியார் மருத்துவர்களை மதிப்பூதியம் அடிப்படையில் அமர்த்தி அறுவைச் சிகிச்சை செய்ய தோராயமாக தேவைப்படும் செலவுத் தொகையான 40/– இலட்சத்தினை ஒதுக்கீடு செய்யவும், மற்றும் இதுவரை தனியார் மருத்துவர்களை அழைத்து மதிப்பூதியம் அடிப்படையில் செய்யப்படும் அறுவை சிகிச்சைகளுக்கு செலவு செய்ததற்கு பின்னேற்பு அனுமதியும் வேண்டப்படுகிறது.

எனவே, கீழ்காணும் இனங்களுக்கு ,

1. 10 எண்ணிக்கை 24 மணி நேர மருத்துவமனைகளில் அவசர காலங்களில் மதிப்பூதியம் அடிப்படையில் தனியார் சிறப்பு மருத்துவர்களை (அறுவை சிகிச்சை நிபுணர் மற்றும் மயக்க மருந்து மருத்துவ நிபுணர்) அழைத்து பிரசவம் மற்றும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளவும்,
2. நடப்பு நிதியாண்டிற்கு (2011–12) தனியார் மருத்துவர்களுக்கு மதிப்பூதியம் வழங்க தோராயமாக தேவைப்படும் தொகை 40 இலட்சத்தினை (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்) ஒதுக்கீடு செய்து செலவு செய்யவும் , மற்றும் நடப்பாண்டில் இதுவரை மதிப்பூதியம் அடிப்படையில் தனியார் மருத்துவர்களை அழைத்து அறுவை சிகிச்சை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,
3. இனி வரும் ஆண்டுகளிலும், இவ்வகையில் அவசர காலங்களில் மதிப்பூதியம் அடிப்படையில் தனியார் சிறப்பு மருத்துவர்களை அழைத்து அவசர சிகிச்சை அளிக்க தேவைப்படும் நிதியினை ஒதுக்கீடு செய்து செலவு செய்ய அனுமதியும்,

நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**13.07.2011 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண். 36/2011 நாள் 13.07.2011–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**

**"21.07.2011 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 100/2011 நாள் 21.07.2011–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".**

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.பி12/2716/07</u>**
**<u>ஆணையர் அவர்களின் 08.07.2011 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.225/2011 பொருள் எண்.36

**சென்னை மாநகராட்சி – இந்திய அரசுத்திட்டம் (GOI) நகர்புற செயல்பாட்டுதிட்டம் (URS) இந்திய மக்கள் தொகைத்திட்டம் (5) (IPPV) மற்றும் குழந்தைகள் – நலத்திட்டம் (CWC)- சில்லறை செலவீனம் (Contingent Expenses) – 6 மாதத்திற்கு ஒருமுறை – முன்பணம் வழங்க அனுமதி.**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையின் கீழ் 4 திட்டங்கள் இயங்கி வருகின்றன. இந்நான்கு திட்டங்களில்

திட்டம்– 1) மகப்பேறு (ம) குழந்தை நல மைய திட்டங்களின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் சம்பளம் (ம) மையங்களில் சில்லறை செலவுகள் யாவும் மாநகராட்சி நிதியிலிருந்து செலவழிக்கப்பட்டு வருகிறது.

திட்டம்–2) களப்பணி செயல்பாடு திட்டம் மற்றும்

திட்டம்–3) இந்திய அரசு திட்டம் ஆகிய இவ்விரு திட்டங்களின் கீழ் பணிபுரியும் பணியாளர்களது சம்பளச்செலவினம் (ஈட்டிய விடுப்பு சம்பளம் நீங்கலாக) (ம) நலவாழ்வு மையங்களின் சில்லறை செலவினங்கள் உள்பட மத்திய அரசிடமிருந்து 100 சதவீதம் மானியம் மாநில குடும்ப நல இயக்ககம் மூலமாக தொடர்ந்து இந்நாள் வரை மீளப்பெற்று சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டு வருகிறது.

திட்டம்–4) தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட இந்திய மக்கள் தொகை திட்டம்–5 உலக வங்கி நிதி உதவியின் கீழ் 1989 முதல் ஆகஸ்டு 97 வரை அரசு ஆணை எண்.414 மற்றும் 1508/சுகாதாரம்(ம) குடும்பநலத்துறை நாள்31.07.1986ன்படி இயங்கி வந்தது.

01.09.1997 முதல் 31.03.2001 வரை மாநகராட்சியிலிருந்து செலவழிக்கப்பட்டது. இச்செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதியும் அரசின் அனுமதியும் பெறப்பட்டது. இதன் பிறகு அரசு ஆணைப்படி முடிவடைந்த இந்திய மக்கட் தொகை திட்டம்–5ஐ மறுசீரமைப்பின் மூலம் 01.04.2001 முதல் பணியாளர்களுக்கு வழங்கப்படும் மொத்தம் சம்பள செலவினத்தில் (Salary only) மூன்றில் இரண்டு பங்கு தொகை மான்யமாக மாநில அரசிடமிருந்து சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து ஒருபங்கு தொகையும் பகிர்ந்து கொள்ள நிரந்தர அரசு ஆணை வழங்கியுள்ளது. இவ்வாறு ஆண்டுதோறும் மாநகராட்சிக்கு மாநில அரசின் 2 பங்கு தொகை மானியம் தொடர்ந்து இந்நாள் வரை கிடைத்து வருகிறது.

மேலும் இதர செலவினங்களில் சில்லறை செலவினங்கள் இவ்வரசாணையில் அளிக்கப்படவில்லை இருப்பினும், மருந்து பொருட்களுக்கு ஆகும் செலவினத்தை சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து செலவழிக்க மருந்து பொருட்களின் செலவினத்தை ஏற்கவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மான எண்.93/84ன்படி சஞ்சிவிராயன்பேட்டை பிபிபி மையத்திற்கு மாதாமாதம் சில்லறை செலவினமாக செலவழிப்பற்கு ரூ. 3,000/-அனுமதிக்கப்பட்டுள்ளது. இதுபோல சைதாப்பேட்டை, புளியந்தோப்பு மற்றும் வடபழனி பிபிபி மையங்கள் மற்றும் 9 எஸ்.டி.யூ. மையங்கள் இயங்கி வருகிறது. மேற்படி மையங்களில் வருடந்தோறும் ஏறக்குறைய 15000 குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சைகள் நடைபெற்று வருகின்றன. ஒரு குடும்ப கட்டுப்பாடு அறுசை சிகிச்சை செய்து கொள்ளும் தாய்மார்களுக்கு அரசு ஆணை எண்.165 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை (ஆர்1) நாள்.03.06.2008 என்பதன்படி 03.06.2008ல் இருந்து கீழ்கண்டவாறு தொகை வழங்கப்பட்டு வருகிறது.

| வ.எண். | இனம் | அரசு சுமையங்கள் / உள்ளாட்சி துறை உட்பட | | |
|---|---|---|---|---|
| | | ஆண் ரூ. | பெண் BPL ரூ. | APL ரூ. |
| 1 | அறுவை சிகிசிச்சை செய்து கொள்ளும் நபருக்கு ஊக்க தொகை | 1100 | 600 | 250 |
| 2 | ஊக்குவிப்பவர் (Motivator) | 200 | 150 | 150 |
| 3 | மருந்து மற்றும் இதர இனங்கள் | 50 | 100 | 100 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | அறுவவை சிகிச்சை செய்யும் பணியாளர் | 100 | 75 | 75 |
| 5 | மயக்க மருந்து அளிப்பவர் | – | 25 | 25 |
| 6 | செவிலியர்களுக்கான தொகை | 15 | 15 | 15 |
| 7 | தியேட்டரில் பணி செய்யும் பணியாளர் | 15 | 15 | 15 |
| | மொத்தம் | 1380 | 980 | 630 |

இதன்படி குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் குறிப்பாக தாய்மார்களுக்கு ரூ.980ல் Drugs and Dressing இனத்தின் கீழ் பெறப்பட்டு வரும் ரூ.100/–ஐ குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு 15000X100 வீதம் ரூ.15,00,000/– என சென்னை

மாநகராட்சிக்கு வருவாய் கிடைக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மான எண்490/2008ன்படி ஐபிபி-5, ஜீஓஐ (ம) ஓ ஆர் ஏஸ் நலவாழ்வு (ம) குழந்தைகள் நலமையங்களில் கீழ்கண்டவாறு :-

1. 40 நலவாழ்வு மையங்களுக்கு சில்லறை செலவினமாக வருடத்திற்கு ரூ.3,000/- வீதமும்
2. 10 மருத்துவ மண்டல மையங்களுக்கு சில்லறை செலவினமாக வருடத்திற்கு ரூ.5,000/- வீதமும்
3. 4 பேறுகால பின் பணித்திட்ட மையங்களுக்கு சில்லறை செலவினமாக .6,000/- வீதமும்
4. 9 அறுவை சிகிச்சை அரங்குகளுக்கு சில்லறை செலவீனமாக ரூ 4,000/-வீதமும்
5. தலைமையிடம் சம்பந்தப்பட்ட சில்லறை செலவினத்திற்கு ஒருவருடத்திற்கு ரூ. 20,000/- வீதமும்
6. ஜி.ஓ.ஐ மையங்களில் சில்லறை செலவீனத்திற்கு ஒருவருடத்திற்கு ரூ.4,000/- வீதமும்
7. ஓ.ஆர்.எஸ் மையங்களில் சில்லறை செலவீனத்திற்கு ஒருவருடத்திற்கு ரூ. 4,000 வீதமும்.
8. ஓ.ஆர்.எஸ் திட்டத்தின்படி தலைமையிடம் சம்மந்தப்பட்ட சில்லறை செலவீனத்திற்கு ஒரு வருடத்திற்கு ரூ 35,000 விதம் செலவிட அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி சில்லறை செலவினத்தில் ஒவ்வொரு மையத்திற்கும் மாதாமாதம் ரூ.100-க்கான பட்டிகள் அளித்த பின்னர் காசோலையாக மருத்துவ அலுவலர் / மண்டல அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது பொருட்களின் விலை ஏற்றத்தினால் மேற்படி ஒதுக்கப்பட்ட நிதி போதவில்லை அவ்வப்போது நலவாழ்வு மையங்களில் இருந்து ரூ 50,ரூ 40, ரூ 100 என தனித்தனிபட்டிகள் சம்ர்ப்பிக்கும் போது ஒவ்வொரு பட்டிக்கான தொகையினை ரூ.50, ரூ.40 மற்றும் ரூ.100/- என காசோலைகளாக வழங்கப்பட்டு வருகிறது. இதனால் காசோலைகளின் எண்ணிக்கை கூடும் நிலை ஏற்படுகிறது. நலவாழ்வு மைய மருத்துவ அலுவலர், மண்டல அலுவலர் மற்றும் பேறுகாலபின் பணித்திட்ட மருத்துவ அலுவலர்களுக்கு அவரவர் வருடாந்திர செலவினத்தில் 50% முன்தொகையாக வழங்கும் பட்சத்தில் முன்பணத்தினை செலவழித்த பின்னர் ஒரே நேரத்தில் பட்டிகள் அனைத்தும் நேர் செய்யலாம் என கருதப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி 40 நலவாழ்வு மையங்களுக்கு மன்றத்தீர்மானத்தின்படி சில்லறை செலவீனம் வருடத்திற்கு ரூ.3,000/-என தீர்மானம் பெறப்பட்டதில். தற்போதைய விலை ஏற்றத்தினால் இம்மையங்களுக்கு வருடத்திற்கு ரூ.4,000/- உயர்த்தி வழங்கலாம் என கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் பிபிபி மற்றும் அறுவை சிகிச்சை மையங்களுக்கு மாதாமாதம் சம்பளக் கணக்கு அலுவலகம்(தெ)-க்கு அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் தாய்மார்களுக்கு ஊக்கத் தொகை அளித்ததற்கான பட்டிகள் 3 செட்டுகள் தயார் செய்து அனுப்பும்போது தட்டச்சு செய்வதற்கான செலவினம் செய்தல், குறிப்பிட்ட சிறிய ஆஸ்பத்திரி உபகாரணங்கள் அவசரத் தேவைக்கு பழுதுபார்த்தல். தலைமை அலுவலகத்திற்கு வந்து போகும் செலவினம், மற்றும் குடும்பநல நிகழ்ச்சிகள் தொடர்பான செலவினத்திற்கு ஒரு பிபிபி மற்றும் அறுவை சிகிச்சை மையத்திற்கு ஒரு மாதத்திற்கு ரூ.1,500/-விதம் தேவைப்படுசிறது. இதன்படி ஒருவருடத்திற்கு ரூ.1,500/- x 12 வீதம் ரூ.18,000/- தேவைப்படுகிறது. 4 பிபிபி அறுவை அரங்கிற்கு மாதம் ரூ.3,000/- அனுமதிக்கப்பட்டுள்ளது, மன்றத்தீர்மானத்தின்படி ஏற்கனவே ஒரு பிபிபி மற்றும் அறுவை சிகிச்சை மையத்திற்கு ஒருவருடத்திற்கு ரூ 6,000/.- மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. தற்போது கூடிவரும் அறுவை சிகிச்சை மற்றும் இதர செலவினத்தினால் கூடுலாக நிதி தேவைப்படுகிறது.

இதன்படி கீழ்க்கண்டவாறு கூடுதல் நிதி ஒதுக்கீடு விவரம் வழங்கப்பட வேண்டிய 50% முன் பணத்தொகை விபரம் அளிக்கப்பட்டுள்ளது:-

| வ. எண் | மையங்கள் | மொத்த செலவினத் தொகை | வழங்கப்பட வேண்டிய 50%முன் பணத் தொகை | காலம் |
|---|---|---|---|---|
| 1 | 40 நலவாழ்வு மையங்கள் | ரூ. 4,000/- (தலா ஒரு மையம்) | ரூ. 2,000/- | பிரதி ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் வரை மற்றும் செப்டம்பர் முதல் மார்ச் வரை |
| 2 | மருத்துவ மண்டல மையம் ( Zones) | ரூ. 5,000/- (தலா ஒரு மையம்) | ரூ.2,500/- | பிரதி ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் வரை மற்றும் செப்டம்பர் முதல் மார்ச் வரை |
| 3 | பேறுகால பின் பணித்திட்ட மையம் (PPP) | ரூ.18,000/- (தலா ஒரு மையம்) | ரூ.9,000/- | பிரதி ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் வரை மற்றும் செப்டம்பர் முதல் மார்ச் வரை |
| 4 | 9 அறுவை சிகிச்சை அரங்குகளுக்கு (STU) | ரூ.18,000/- (தலா ஒரு மையம்) | ரூ.9,000/- | பிரதி ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் வரை மற்றும் செப்டம்பர் முதல் மார்ச் வரை |
| 5 | தலைமையிடம் சம்பந்தப்பட்ட செலவீனம் (URS) ரூ.35,000 + 7500 | ரூ.42,500/- (தலா ஒரு மையம்) | ரூ. 21,250/- | பிரதி ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் வரை மற்றும் செப்டம்பர் முதல் மார்ச் வரை |
| 6 | 33 ஜி.ஓ.ஐ.திட்ட மையம் | ரூ. 4,000/- (தலா ஒரு மையம்) | ரூ.2,000/- | பிரதி ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் வரை மற்றும் செப்டம்பர் முதல் மார்ச் வரை |
| 7 | ஓவர்சிஸ் மையத்திட்டங்களுக்கு(ORS) | ரூ. 4,000/- (தலா ஒரு மையம்) | ரூ. 2,000/- | பிரதி ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் வரை மற்றும் செப்டம்பர் முதல் மார்ச் வரை |
| 8 | குழந்தைகள் நல மையம் | ரூ.5,000/- (தலா ஒரு மையம்) | ரூ. 2,500/- | பிரதி ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் வரை மற்றும் செப்டம்பர் முதல் மார்ச் வரை |

இதில் 20 ஓ.ஆர்.எஸ் நலவாழ்வு மையங்கள் மற்றும் ஜி. பி.ஐ. நலவாழ்வு மையங்களுக்கான சில்லறை செலவீனம் யாவும் அரசிடம் இருந்து மீளப்பட்டு வருகிறது என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. சில்லறை செலவீனம் குறித்து துணை ஆணையர் (சுகாதாரம்) முன்னிலையில் வாராந்திர ஆய்வுக் கூட்டத்தின்போது இதுபற்றி மண்டல அலுவலர்கள் தங்கள் குறைகளை தெவித்துள்ளனர்.

இவ்வாறாக மாவட்ட குடும்பநலத் துறையின் கீழ் இயங்கும் 40 ஐபிபி 5 நலவாழ்வுமையங்கள் 4 பேறுகாலப் பின் பணித்திட்ட மையங்கள் (பிபி8) 9 அறுவை சிகிச்சை மையங்கள் (SN) 10 மண்டலங்கள் தலைமையிடம் 33 ஜி.பி.ஐ. மையங்கள், 20 ஓ.ஆர்.எஸ் நலவாழ்வு மையங்கள் மற்றும் குழந்தைகள் நலவாழ்வு மையங்களுக்கு சில்லரை செலவினம் சம்பந்தப்பட்ட பொருட்களுக்கு மன்றத்தின் மேலான அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1) ஏற்கனவே பெறப்பட்டுள்ள மன்றத்தீர்மானத்தின்படி 40 நலவாழ்வு மையங்களுக்கு தலா ஒரு மையத்திற்கு வழங்கப்பட்ட ரூ.3,000/- ஐபிபி5 திட்டத்தில் உள்ளபடி வருடத்திற்கு ரூ.4,000/—ஆக உயர்த்தவும்.
2) 40 ஐபிபி5 திட்ட நலவாழ்வு மைய மருத்துவ அலுவலரின் பெயரில் தலா ஒரு மையத்திற்கு ஒரு வருடத்திற்கான சில்லறை செலவீனமான ரூ. 4,000/- ல் 6 மாதங்களுக்கு ஒரு முறை ரூ. 2,000/- முன்பணமாக வழங்கிடவும்.
3) 10 மண்டல மருத்துவ மையங்களுக்கு மண்டல அலுவலரின் பெயரில் தலா ஒரு மண்டலத்திற்கு வருடாந்திர சில்லறை செலவீனமான ஒரு வருடத்திற்கான ரூ. 5,000/- ல் ரூ. 2,500/-ஐ முன்பணமாக வழங்கிடவும்.

4) 4 பேறுகாலப் பின்பணித்திட்ட மையத்திற்கு (ppp) மருந்து அலுவலரின் பெயரில் தலா ஒரு மையத்திற்கு வருடாந்திர செலவீனமான ஒரு வருடத்திற்கு ரூ.18,000/-ஆக உயர்த்தி 6 மாதங்களுக்கு முன் பணம் ரூ.9,000/- வழங்கிடவும்.
5) 9அறுவை சிகிச்சை மையங்களுக்கு (STU) மருத்துவ அலுவலரின் பெயரில் தலா ஒருவருடத்திற்கு வருடாந்திர செலவீனமான ஒரு வருடத்திற்கு ரூ.18,000/-ஆக உயர்த்தி 6 மாதங்களுக்கு ரூ. 9,000/- ஐ முன் பணமாக வழங்கிடவும்.
6) ஓ.ஆர்.எஸ். திட்டத்தின் கீழ் தலைமையிடம் சம்மந்தப்பட்ட சில்லறை செலவினமான ரூ.42,500/- மாவட்ட குடும்பநலத்துறை அலுவலரின் பெயரில் ஒரு வருடத்திற்கான ரூ.21,250/-ஐ 6 மாதங்களுக்கு முன்பணமாக வழங்கிடவும்.
7) 33 ஜி. ஓ.ஏ. திட்ட மையங்களுக்கு மருத்துவ அலுவலரின் பெயரில் வருடாந்திர செலவீனமான ஒரு வருடத்திற்கான ரூ.4,000/-ல் 6 மாதங்களுக்கு ரூ.2,000/- முன்பணமாக வழங்கிடவும்.
8) 20 ஓ.ஆர்.எஸ். திட்ட மையங்களுக்கு மருத்துவ அலுவலரின் பெயரில் ஒரு வருடத்திற்கான ரூ.4,000/-ல் 6 மாதங்களுக்கு ரூ. 2,000/- முன்பணம் வழங்கிடவும்.
9) முன்பணமாக பெறப்பட்ட பணத்தினை பிரதி ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் வரை செலவழித்த பின்னர் பட்டிகள் அனைத்தையும் கணக்கு அலுவலர் பகுதிக் கணக்கு குழுவிற்கு அனுப்பிவைத்து நேர் செய்தற்கும்.
10) 6 மாதங்களுக்கு வழங்கப்பட்ட முன்பணம் ரூ. 2,000, ரூ. 2,500, ரூ. 21,250/- மற்றும் இதர இனங்களின்படி செலவழிக்காமல் மருத்துவ அலுவலரின் பெயரில் இருப்பு இருந்தால் அதனை அடுத்த 6 மாதத்திற்கு ஆரம்ப இருப்பாக கொண்டு மேலும் அவரவர்குரிய 6 மாதத்திற்குரிய முன்பணத்தை பெற்றுக்கொள்ளவும்.
11) வருடத்தின் இறுதி மாதத்தில் (மார்ச்சு) மேற்படி மையங்களில் பெறப்பட்ட வருடாந்திர முன்பணம் அனைத்தும் நேர் செய்யப்பட்ட பின்னரே, அடுத்தடுத்த காலங்களில் முன்பணம் வழங்கிடவும் .
12) மேற்படி முன்பணம் வழங்கும் நடைமுறை ஜுன் 2011 முதல் பின்பற்றவும்.

நிலைக்குழு(பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

13.07.2011 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் இப்பொருளின் மீது சில்லரை செலவீனம் வழங்குவது குறித்து விவாதிக்கையில் ஆறு மாத காலத்திற்கு ஒரு முறை என்பதை மூன்று மாத காலத்திற்கு ஒரு முறை அதற்குரிய தொகையை வழங்கலாம் என்ற பெரும்பான்மை உறுப்பினர்களின் கருத்துக்களின் அடிப்படையில் நிலைக்குழு (பொது சுகாரம்) தீர்மான எண்.40/2011 நாள் 13.07.2011-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''21.07.2011 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 99 /2011 நாள் 21.07.2011–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/19608/2011**
**ஆணையாளர் அவர்களின் 19.07.2011 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.226/2011 பொருள் எண்.37

**மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல்**

சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. : -

| | | |
|---|---|---|
| 1 | பதவி உயர்வுக்கான பதவியின் பெயர் | மண்டல அலுவலர் |
| 2 | மைய நாள் | 01.07.2010 |
| 3 | ஊதிய விகிதம் | ரூ15600–39100 + நிலை ஊதியம் ரூ.7600 |
| 4 | ஊட்ட பதவியின் பெயர் மற்றும் தகுதிகள் | (1) கூடுதல் வருவாய் அலுவலர் பதவியிலிருந்து பதவி மாற்றம் மூலம், தலைமை கணக்கு அலுவலர் பதவி உயர்வு மூலம்,<br>(2) கூடுதல் சுகாதார அலுவலர், பதவி உயர்வு மூலம்<br>(3) செயற் பொறியாளர், கோட்ட மின் பொறியாளர், பதவி உயர்வு மூலம், பொதுப் பிரிவு / சுகாதாரப் பிரிவு / பொறியியல் பிரிவில் 3 : 2 : 5 என்ற விகிதாசார அடிப்படையில் இப்பதவியினை நிரப்ப வேண்டும்.<br><br>(Promotion to the post shall be made on the grounds of merit and ability, seniority being considered where merit and ability are approximately equal).<br><br>(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தால் வழங்கப்பட்ட பட்டம்.<br><br>(ஆ) வளர்நிலைப் பதவியில் 3 ஆண்டுகள் பணி தகுதி பெற்றிருக்க வேண்டும்.<br><br>(இ) சார்நிலை அலுவலருக்கான கணக்கு தேர்வு பாகம்–1 அல்லது செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| 5 | காலிப்பணியிட விவரம் | ஏற்பட்டுள்ள காலிப்பணியிடத்தின் விவரம் – 3<br><br>1) திரு. துரைக்கண்ணு, பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் ஏற்பட்ட காலிப்பணியிடம்.<br>2) திரு. ஜெ. அட்லி, மேற்பார்வை பொறியாளராக பதவி உயர்வு<br>3) திரு. எம்.எஸ். பிரேம்நாத், மேற்பார்வை பொறியாளராக பதவி உயர்வு |
| 6 | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா? இல்லையெனில் காரணம். | இல்லை, ஒரே ஒரு நபரை கொண்டு தயாரிக்கப்பட்ட தெரிவுப்பட்டியலிலுள்ள நபர் மேற்பார்வை பொறியாளர் பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியலில் இடம்பெற்றுள்ளதால் மண்டல அலுவலர் பதவி உயர்வு வழங்கப்படவில்லை. |

சென்னை மாநகராட்சியில் மொத்த அனுமதிக்கப்பட்ட மண்டல அலுவலர்களின் பணியிடங்கள் 10 ஆகும். இன்றைய தேதியில் 7 மண்டல அலுவலர்களின் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. தற்போது மண்டல அலுவலர் பதவியில் மூன்று காலிப்பணியிடம் நிரப்ப வேண்டியுள்ளது.

சென்னை மாநகராட்சியில் மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பதவி உயர்வு அளித்து ஆணை வழங்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

**முதுநிலைப்படி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய தகுதி விவரம் :**

நாளது தேதியில் முதுநிலை அடிப்படையில் கீழ்கண்டவர்கள் செயற்பொறியாளர்களாக பணியாற்றி வருகின்றனர்.

| வ.எண். | பெயர் திருவாளர்கள் | பணிபுரியும் இடம் |
|---|---|---|
| 1. | திரு. யு. பெருமாள் | பணித்துறை |
| 2. | வி.சி. ராஜசேகரன் | பேருந்து சாலைகள் துறை |
| 3. | ஜி. ரமேஷ் | பணித்துறை (தற்காலிக பணிநீக்கம்) |
| 4. | ஆர். சீனிவாசன் | கட்டடத்துறை |
| 5. | ஏ. வின்செண்ட் | பாலங்கள் துறை |
| 6. | கே. யதுகுலராவ் | மண்டல அலுவலர் – 8 (பொறுப்பு) |
| 7. | ஆர். மகாலிங்கம் | திடக்கழிவு மேலாண்மை துறை (தற்காலிக பணிநீக்கம்) |
| 8. | ஆர். சுதா | தலைமை பொறியாளர் (கட்டடம் மற்றும் பாலங்கள் அலுவலகம் |
| 9. | கே. வரதராஜ் | மண்டலம்–8 |
| 10. | சி. பூமிநாதன் | மண்டல அலுவலர் – 2 (பொறுப்பு) |
| 11. | எம். சம்பத் | மண்டல அலுவலர் – 7 (பொறுப்பு) |
| 12. | எம். பன்னீர் செல்வம் | பேருந்து சாலைகள் துறை |
| 13. | எ. வேணுகோபால் | மண்டல அலுவலகம் – 9 |
| 14. | எ. சுப்பிரமணியம் | திடக்கழிவு மேலாண்மை துறை |
| 15. | ஏ. தர்மன் | கட்டடத்துறை |
| 16. | கே. திருமங்கையாழ்வார் | மண்டலம் – 8 |
| 17. | எம். புகழேந்தி | மண்டலம் – 1 |

2010 – 2011ஆம் ஆண்டிற்கான மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்க செயற்பொறியாளர் பதவியில் மூப்பு நிலையில் தகுதி வாய்ந்த பொறியாளர்களின் பட்டியல் கீழ்கண்டவாறு அமைகிறது.

| வ. எண். | செயற்பொறியாளரின் பெயர் திருவாளர்கள் பதவி / பணிபுரியும் இடம் | வளர்நிலை பதவியில் 3 ஆண்டுகள் பூர்த்தியாகும் நாள் | தெரிவுப் பட்டியலில் சேர்க்கலாமா | மந்தன அறிக்கை விவரம் | தெரிவுப்பட்டியலில் தவிர்ப்பதற்கான காரணங்கள் |
| --- | --- | --- | --- | --- | --- |
| 1. | யு. பெருமாள்<br>பணித்துறை | 08.07.2003 | இல்லை | வரப் பெறவில்லை | இவர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 துணை விதி எண் 10(ஆ)ன் கீழ் கடுங்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிலுவையில் உள்ளதால் இவரது பெயரினை இப்பட்டியலில் சேர்ப்பதை நிறுத்தி வைக்கலாம். |
| 2. | வி.சி. ராஜசேகரன்<br>மழைநீர் வடிகால் துறை | 07.07.2003 | இல்லை | வரப் பெறவில்லை | இவருடைய பெயர் 01.02.2011ஐ மைய நாளாக கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு பொறியாளர் தெரிவுப்பட்டியலில் இடம்பெற்றுள்ளதால் இவரது பெயரினை மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியலில் சேர்க்க வேண்டிய அவசியம் எழாது. |
| 3. | ஜி. ரமேஷ்<br>பணித்துறை | 07.07.2003 | இல்லை | வரப் பெறவில்லை | இவர் தற்காலிக பணி நீக்கத்தில் இருப்பதால் இவரது பெயரினை இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க இயலாது. |
| 4. | ஆர். சீனிவாசன்<br>கட்டிடத்துறை | 17.10.2005 | இல்லை | வரப் பெறவில்லை | இவருடைய பெயர் 01.02.2011ஐ மைய நாளாக கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு பொறியாளர் தெரிவுப்பட்டியலில் இடம்பெற்றுள்ளதால் இவரது பெயரினை மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியலில் சேர்க்க வேண்டிய அவசியம் எழாது. |
| 5. | ஏ. வின்செண்ட்<br>பாலங்கள் துறை | 17.10.2005 | இல்லை | வரப் பெறவில்லை | இவர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 துணை விதி எண் 10(ஆ)ன் கீழ் கடுங்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிலுவையில் உள்ளதால் இவரது பெயரினை இப்பட்டியலில் சேர்ப்பதை நிறுத்தி வைக்கலாம். |
| 6. | கே. யதுகுலராவ்<br>மண்டல அலுவலர் – 8 (பொ.) | 17.10.2005 | இல்லை | வரப் பெறவில்லை | இவர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 துணை விதி எண் 10(ஆ)ன் கீழ் கடுங்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிலுவையில் உள்ளதால் இவரது பெயரினை இப்பட்டியலில் சேர்ப்பதை நிறுத்தி வைக்கலாம். |
| 7. | ஆர். மகாலிங்கம்<br>திடக்கழிவு மேலாண்மை துறை | 17.10.2005 | இல்லை | வரப் பெறவில்லை | இவர் தற்காலிக பணி நீக்கத்தில் இருப்பதால் இவரது பெயரினை இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க இயலாது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8. | ஆர். சுதா<br>தலைமை பொறியாளர்<br>(க(ம)பா) அலுவலகம் | 17.10.2005 | இல்லை | வரப் பெறவில்லை | இவருடைய பெயர் 01.02.2011ஐ மைய நாளாக கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு பொறியாளர் தெரிவுப்பட்டியலில் இடம்பெற்றுள்ளதால் இவரது பெயரினை மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியலில் சேர்க்க வேண்டிய அவசியம் எழாது. |
| 9. | கே. வரதராஜீ<br>மண்டலம் – 8 | 29.09.2005 | இல்லை | வரப் பெறவில்லை | இவர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 துணை விதி எண் 10(ஆ)ன் கீழ் கடுங்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இவரது ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி 6 மாத காலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தண்டனைக் காலம் நடப்பில் உள்ளதால் இவரது பெயரை இப்பட்டியலில் சேர்ப்பதை நிறுத்தி வைக்கலாம். |
| 10. | சி. பூமிநாதன்<br>மண்டல<br>அலுவலர் – 2 (பொ.) | 07.07.2003 | இல்லை | வரப் பெறவில்லை | இவர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 துணை விதி எண் 10(ஆ)ன் கீழ் கடுங்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிலுவையில் உள்ளதால் இவரது பெயரினை இப்பட்டியலில் சேர்ப்பதை நிறுத்தி வைக்கலாம். |
| 11. | எம். சம்பத்<br>மண்டல<br>அலுவலர் – 7 (பொ.) | 07.07.2003 | இல்லை | வரப் பெறவில்லை | இவர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 துணை விதி எண் 10(ஆ)ன் கீழ் கடுங்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிலுவையில் உள்ளதால் இவரது பெயரினை இப்பட்டியலில் சேர்ப்பதை நிறுத்தி வைக்கலாம். |
| 12. | எம். பன்னீர் செல்வம்<br>பேருந்து சாலைகள் துறை | 01.09.2008 | இல்லை | வரப் பெறவில்லை | இவர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 துணை விதி எண் 10(ஆ)ன் கீழ் கடுங்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிலுவையில் உள்ளதால் இவரது பெயரினை இப்பட்டியலில் சேர்ப்பதை நிறுத்தி வைக்கலாம். |
| 13. | எ. வேணுகோபால்<br>திடக்கழிவு மேலாண்மை<br>துறை | 01.09.2008 | இல்லை | வரப் பெறவில்லை | இவர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 துணை விதி எண் 10(ஆ)ன் கீழ் கடுங்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிலுவையில் உள்ளதால் இவரது பெயரினை இப்பட்டியலில் சேர்ப்பதை நிறுத்தி வைக்கலாம். |
| 14. | எ. சுப்பிரமணியம்<br>மழைநீர் வடிகால் துறை | 01.09.2008 | இல்லை | வரப் பெறவில்லை | இவர் தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளதால் இவரது பெயரினை இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க வேண்டிய அவசியம் எழாது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15. | ஏ. தர்மன்<br>கட்டடத்துறை | 11.05.2010 | ஆம் | வரப் பெறவில்லை | இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின் படி உரிய தகுதிகளை பெற்றுள்ளார். தனியர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லாத நிலையில் இவரது பெயரை இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம். |
| 16. | K. திருமங்கையாழ்வார்<br>மண்டலம் – 8 | 11.05.2010 | ஆம் | வரப் பெறவில்லை | இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின் படி உரிய தகுதிகளை பெற்றுள்ளார். தனியர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லாத நிலையில் இவரது பெயரை இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம். |
| 17. | M. புகழேந்தி<br>மண்டலம் – 1 | 11.05.2010 | ஆம் | 11.05.07 முதல் 20.01.08 வரை – மிக நன்று<br><br>20.01.08 முதல் 08.08.08 வரை – நன்று<br><br>08.08.08 முதல் 17.11.08 வரை – மிக நன்று<br><br>17.11.08 முதல் 31.07.09 – மிக நன்று<br><br>31.07.09 முதல் 19.08.10 வரை – மிக நன்று<br><br>02.12.10 முதல் 22.03.11 வரை – மிக நன்று<br><br>22.03.11 முதல் 20.06.11 வரை – மிக மிக நன்று | இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின் படி உரிய தகுதிகளை பெற்றுள்ளார். தனியர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லாத நிலையில் இவரது பெயரை இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம். |

எனவே, மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு பின்வரும் செயற்பொறியாளர்களை கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்

| வ.எண். | பெயர் / திருவாளர்கள் | துறை |
|---|---|---|
| 1. | ஏ. தர்மன் | கட்டடத்துறை |
| 2. | கே. திருமங்கையாழ்வார் | மண்டலம் – 8 |
| 3. | எம். புகழேந்தி | மண்டலம் – 1 |

மேற்படி தெரிவுப்பட்டியலில் வரிசை எண் **1** மற்றும் **2**ல் இடம்பெற்றுள்ள செயற்பொறியாளர்களின் மந்தன அறிக்கைகள் கிடைக்கப்பெறவில்லை அவர்களின் ஒட்டு மொத்த மந்தன அறிக்கையில் பெறப்படும் மொத்த மதிப்பினை (overall rating) பொறுத்து மேலே உள்ள **3** செயற்பொறியாளர்களுக்கு மண்டல அலுவலர்களாக பதவி உயர்வு வழங்கவும், ரூ**. 15600 – 39100** + தர ஊதியம் ரூ**. 7600/–** என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் தற்போது காலியாகவுள்ள பணியிடத்தில் தெரிவுப்பட்டியலில் கண்டுள்ளவர்களை பணியமர்வு செய்து ஆணை வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/17476/2011**

**ஆணையாளர் அவர்களின் 20.07.2011 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.227/2011 பொருள் எண்.38

**உதவி கோட்ட மின் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல்**

சென்னை மாநகராட்சியில் உதவி கோட்ட மின்பொறியாளர் பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதவிக்கான தெரிவுப் பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பதவி உயர்வு வழங்கும் அதிகாரம் ஆகியன மன்றம் பெற்றுள்ளது. இப்பதவிக்கான மைய நாள் ஒவ்வோர் ஆண்டும் ஜுன் மாதம் முதல் தேதி ஆகும். இப்பதவிக்கான ஊட்டப்பதவி உதவி / இளநிலை பொறியாளர் (மின்சாரம்) பதவியாகும்.

உதவி கோட்ட மின்பொறியாளர் பதவியினை பதவி உயர்வின் மூலம் நிரப்பிட வகுக்கப்பட்டுள்ள நியமன விதிகள் பின்வருமாறு.

| Name of the Post | Method of Appointment | Qualification |
|---|---|---|
| **Assistant Divisional Engineer (Electrical)**<br>ரூ.15600–39100 + Grade pay 5400 | By promotion from the category of Junior Engineers (Electrical) and Assistant Engineer (Electrical) in the Corporation Engineering Subordinate Service. | 1.(a) A degree in Electrical Engineering of any University or Institution recognised by the University Grants Commission for purpose of its grant or any other qualification considered equivalent thereto and in the case of promotion service as Asst. Engineer in the Corporation engineering Subordinate Service for a period not less than five year.<br>(b)Diploma in Electrical Engineering of the State Board of Technical Education and Training or any other qualifications considered equivalent thereto and a minimum period of service and experience of 15 years or<br>(c) Subject to the conditions specified below a pass in Sec.A and B of the A.M.I.E.(Ind). Examination with Electrical Engineering (General) and any two of the following subjects under Section B as optional or additional subjects: |

| | | |
|---|---|---|
| | | i Electric supply and power distribution.<br>ii Electical Machinery.<br>iii Electrical Installation.<br>iv Electrical Measurements.<br>v Thermodynamics and Head Engines (Steam and Internal Combustion)<br>vi Hydro Electricity; and<br>vii Hydraulics or Hydraulic Machinery. etc.,<br>2. A pass in the Account Test for Public Works Department Officers and Subordinates. |

கடந்த 01.06.2010ஐ மைய நாளாகக் கொண்டு மேற்படி பதவிக்கான 6 நபர்கள் கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு அனைவருக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு தெரிவுப் பட்டியல் ஆண்டில் உதவி கோட்ட மின்பொறியாளர் பதவியில் பின்வருமாறு காலிப்பணியிடங்கள் உருவாக உள்ளன.

1. திருமதி அறிவுச் செல்வி அவர்கள் உதவி கோட்ட மின் பொறியாளர் பதவியினை நிரந்தரமாக வேண்டாம் என எழுத்துபூர்வமாக தெரிவித்ததால் ஏற்பட்ட காலிப்பணியிடம் – 1
2. திரு. எம்.பி. மோகன், உதவி கோட்ட மின் பொறியாளர் அவர்கள் 06.07.2011 அன்று காலமானதால் ஏற்பட்ட காலிப்பணியிடம் – 1
3. திரு. சி. ஏழுமலை, உதவி கோட்ட மின் பொறியாளர், மண்டலம்–9 அவர்கள் 31.07.2011 அன்று வயதுமுதிர்வு ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் – 1

இந்த ஆண்டிற்கான உதவி கோட்ட மின்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்க உதவி மற்றும் இளநிலை பொறியாளர் (மின்சாரம்) பதவியில் மூப்பு நிலையில் தகுதி வாய்ந்த மூன்று பொறியாளர்களின் பட்டியல் கீழ்க்கண்டவாறு அமைகிறது.

| வ.எண். | உதவி மற்றும் இளநிலை பொறியாளர் (மின்சாரம்) பெயர் திருவாளர்கள் | உதவி மேற்பார்வையாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | குறிப்புரை |
|---|---|---|---|
| 01. | ஏ.எஸ். பிரேம்குமார் | 25.05.85 | இன்றைய தேதியில் தனியர் மீது எந்த வித ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரனைகளோ ஏதும் நிலுவையில் இல்லை. ஆகையால் தனியரின் பெயரை பரிசீலனை செய்யலாம். இவர் பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் 1 மற்றும் 2 தேர்ச்சி பெற்றுள்ளார். |

| | | | |
|---|---|---|---|
| 02. | வி. யுவராஜ் | 24.05.85 | இன்றைய தேதியில் தனியர் மீது எந்த வித ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரனைகளோ ஏதும் நிலுவையில் இல்லை. ஆகையால் தனியரின் பெயரை பரிசீலனை செய்யலாம். இவர் பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் 1 மற்றும் 2 தேர்ச்சி பெற்றுள்ளார். |
| 03. | வி. ராதாகிருஷ்ணன் | 24.05.85 | இன்றைய தேதியில் தனியர் மீது எந்த வித ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரனைகளோ ஏதும் நிலுவையில் இல்லை. ஆகையால் தனியரின் பெயரை பரிசீலனை செய்யலாம். இவர் பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் 1 மற்றும் 2 தேர்ச்சி பெற்றுள்ளார். |

சென்னை மாநகராட்சி பொறியியல் பணிவிதிகள் 1969ன் படி உதவி கோட்ட மின்பொறியாளர் பதவி உயர்வு அளிக்க ஊட்ட பதவியான உதவி பொறியாளர் பதவியில் 5 ஆண்டுகள் பணி முடித்தவர்கள், பட்டய பொறியாளர்களை பொறுத்தமட்டில் 15 ஆண்டுகள் பணி முடித்தவர்களை கொண்டு தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்படுகிறது. பட்டயப் பொறியாளர்களை பொறுத்தமட்டில் பணிவிதிகளில் இளநிலை பொறியாளர் பதவியில் 15 ஆண்டுகள் பணியாற்றிருக்க வேண்டுமென குறிப்பிடப்படவில்லை. எனவே, பட்டயப்படிப்பு முடித்தவர்களில் தனியர்கள் உதவி மேற்பார்வையாளர், டெஸ்டர் மற்றும் ஓவர்சியர் ஆகிய பதவிகளில் மொத்தமாக 15 ஆண்டுகள் பணிபுரிந்தவர்களை உதவி கோட்ட மின்பொறியாளர் பதவி உயர்வுக்கு பரிசீலனை செய்யலாம்.

மேற்கூறியவைகளின் அடிப்படையில், பின்வரும் இனங்கள்

அ) உதவி கோட்ட மின்பொறியாளர் பதவி உயர்வுக்கு பின்வரும் இளநிலை பொறியாளர்களின் (மின்சாரம்) பெயர்களை கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

1. திரு. ஏ.எஸ். பிரேம்குமார்
2. திரு. வி. யுவராஜ்
3. திரு. வி. ராதாகிருஷ்ணன்

ஆ) உதவி கோட்ட மின் பொறியாளர் பதவியில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடங்களிலும், தெரிவுப்பட்டியல் காலாவதியாகும் ஓராண்டு காலம் வரை (The Panel shall be valid for a period of one year from the date of approval by the competent authority), வயது முதிர்வு போன்ற பல்வேறு காரணங்களில் உதவி கோட்ட மின் பொறியாளர் பதவியில் ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களிலும், தெரிவுப்பட்டியலில் உள்ள தகுதியானவர்களுக்கு ரூபாய். 15600 – 39100 + தர ஊதியம் 5400 என்ற ஊதிய விகித அடிப்படையில் உதவி கோட்ட மின் பொறியாளர் பதவி உயர்வு அளித்திடவும் நியமனக் குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

“இதனை மன்றம் ஒத்திவைக்கின்றது.”

*******

**இ.பொ.து.ந.க.எண்.எம்7/1792/2011**

**ஆணையாளர் அவர்களின் 08.07.2011 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.228/2011 பொருள் எண்.39

**பணியமைப்பு**

உயர்நீதிமன்ற 10.07.2008 உத்தரவிற்கிணங்க மாற்றுப்பணி அடிப்படையில் லோடர் ஆப்பரேட்டராக பணிபுரிந்து வந்த திரு. ஈ. பாலசுப்பிரமணி, ஓட்டுநர் அவர்களுக்கு உரிய ஊதிய விகிதத்தில் லோடர் ஆப்பரேட்டராக பதவி உயர்வு அளிக்கப்பட வேண்டும் என்று சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் துறைத் தலைவர் மீது உயர்நீதி மன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது. உயர்நீதி மன்ற ஆணை மற்றும் உயர்நீதிமன்ற அவமதிப்பு ஆணைக்கிணங்க மாற்றுப் பணி அடிப்படையில் லோடர் ஆப்பரேட்டர்களாக பணிபுரிந்து வருகின்ற ஓட்டுநர்களின் மூப்புப் நிலைப்பட்டியல் கிடைக்கப்பெற்ற ஆவணங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு 22 மாற்றுப் பணி அடிப்படையில் லோடர் ஓட்டுநர்களாக பணிபுரிந்து வருகின்ற ஐந்து ஓட்டுர்களுக்கு 06.06.2011 நாளிட்ட செயல்முறை ஆணையில் லோடர் ஆப்பரேட்டராக பதவி உயர்வு அளிக்கப்பட்டது.

இச்சூழ்நிலையில் சமர்ப்பிப்பது யாதெனில் தற்போதுள்ள 45 முன்பளுதூக்கி இயந்திரங்கள் மூலம் (பெரியது (ம) சிறியது) தினமும் கட்டிட கழிவுகள், குப்பைகள் மற்றும் வேறு அத்தியாவசியமான பணிகளான தூர்வாருதல், அனுமதியற்ற கட்டிடங்களை இடித்தல், கால்வாய் வெட்டுதல் (Trench cutting ) முதலிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 174 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட மற்றும் 50 லட்சம் மக்கள் தொகை கொண்ட சென்னை போன்ற பெரு நகரத்தில் இத்தகைய இயந்திரங்களின் செயல்பாடு முக்கியமானது என்பது குறிப்பிடத் தக்கது. மேலும், சென்னை மாநகரத்தின் எல்லை அருகிலுள்ள அம்பத்துார் , திருவொற்றியூர் ஆகிய ஒன்பது நகராட்சிகளை உள்ளடக்கி விரிவாக்கம் செய்வது தற்போது திட்ட அளவில் உள்ளது

அரசாணை 580, ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சி நிர்வாகத்துறை, நாள் 11.04.1984ன்படி ஒப்பளிக்கப்பட்ட லோடர் ஆப்பரேட்டர் பணியிடங்கள் 10 ஆகும். தற்போது 22 மாற்றுப்பணி அடிப்படை லோடர் ஓட்டுநர்களின் மூப்புநிலை பட்டியலில் முதன்மையாக உள்ள 5 நபர்களுக்கு லோடர் ஆப்பரேட்டர் பதவி உயர்வு அளிக்கப்பட்ட பின்னர் மீதமுள்ள 17 நபர்களுக்கு லோடர் ஓட்டுநர் பதவிக்குரிய ஊதியம் பெறாமல் லோடர் ஆப்பரேட்டர்களாக பணிபுரிய வேண்டிய நிலை உள்ளது.

இம்மாதிரி பணிபுரிந்து கொண்டிருக்கும் திரு.பி.தட்சிணாமூர்த்தி, அவர்கள் லோடர் ஓட்டுநர் பதவி உயர்வு வேண்டி உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின்மீது உயர்நீதி மன்றம் தனியரது கோரிக்கையை பரிசீலித்து உத்தரவு வழங்க ஆணை பிறப்பித்துள்ளது. தற்போது லோடர் ஆப்ரேட்டர் காலி பணியிடங்கள் 5 மட்டும் உள்ளதால் அப்பணியிடங்கள் நிரப்பப்பட்டன. தனியர் மூப்பு பட்டியலில் வரிசை எண். 8ல் இடம் பெற்றுள்ளதால் தற்போது பதவி உயர்வு வழங்க இயவில்லை.

தற்போது 45 முன்பளுதூக்கி இயந்திரங்களை இயக்க 45 லோடர் ஆப்பரேட்டர்கள் தேவைப்படுகின்றனர். ஏற்கனவே 10 லோடர் ஆப்ரேட்டர்கள் பணியிடங்கள் உள்ள நிலையில் பணிமாற்று அடிப்படையில் லோடர் ஓட்டுநர்களாக பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு லோடர் ஆப்பரேட்டர் பதவி வழங்க வேண்டியுள்ளதால் 35 ( 45 –10) ஓட்டுநர் பதவிகளை லோடர் ஆப்பரேட்டர் பதவிகளாக உயர்நிலைப்படுத்த அரசின் அனுமதி கோருவது அவசியமாகிறது.

ஓட்டுநர்களின் ஊதிய விகிதம் ரூ.5200–20200+2000 தர ஊதியம் ஆக இருந்ததை ஒரு நபர் குழு அரசு ஆணை எண்.65, நிதித் (ஊதிய பிரிவு) துறை, நாள்.26.02.2011 மூலம் ரூ.5200–20200+2400 தர ஊதியமாக மாற்றியமைக்கப்பட்டது.

லோடர் ஆப்ரேட்டர் பதவியின் ஊதிய விகிதம் ரூ.5200–20200+2400 தர ஊதியம் ஆகும். மேற்கண்ட இரு பதவிகளின் ஊதிய விகிதம் தற்போது இணையாக உள்ளதால் கூடுதல் செலவீனம் ஏற்படாது என சமர்ப்பிக்கப்படுகிறது.

இவ்வாறு லோடர் ஆப்பரேட்டர்களாக உயர்நிலைப்படுத்தும்போது பணியாளர்கள் தங்களது பணியில் ஈடுபாடு கொண்டு பணிபுரியும் நிலை ஏற்பட்டு அதன் விளைவாக கட்டிட இடிபாடுகள் மற்றும் துப்புரவு பணிகளில் முன்னேற்றம் ஏற்படும் என கருதப்படுகிறது.

எனவே, சென்னை மாநராட்சியில் உள்ள மொத்த ஓட்டுநர்களில் **35** ஓட்டுநர்களை ரூ.**5200–20200** + **2400** தர ஊதியம் (ம) இதர படிகளுடன் உயர்நிலைபடுத்த அரசுக்கு முன்மொழிவு அனுப்ப ஆணை வேண்டி நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ப.து.ந.க.எண்.1365/2011**
**ஆணையாளரின் 14.07. 2011 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.229/2011 **பொருள் எண்: 40**

**தரப்படுத்தப்பட்ட விலை விவர அட்டவணை – ஊதியம் – ஏற்பு**

பொதுப்பணித் துறை, தலைமைப் பொறியாளர், சேப்பாக்கம், சென்னை, அவர்களால் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்ட, விலை விவர அட்டவணை (ஊதியம் மற்றும் பொருட்கள் அடிப்படை இனங்கள் மட்டும்) பெறப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில், ஒவ்வொரு ஆண்டும் பொதுப்பணித் துறையிலிருந்து பெறப்படும் தரப்படுத்தப்பட்ட விலை விவர அட்டவணை மன்றத்தின் முன் வைக்கப்பட்டு ஒப்புதல் பெற்ற பிறகு சென்னை மாநகராட்சியின் அனைத்துத் துறைகளிலும் நடைமுறைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். அது போலவே, இந்த ஆண்டும் பொதுப்பணித் துறையிலிருந்து பெறப்பட்ட தரப்படுத்தப்பட்ட விலை விவர அட்டவணை (ஊதியம் மற்றும் பொருட்கள் –அடிப்படை இனங்கள் மட்டும்) சென்னை மாநகராட்சியின் அனைத்துத் துறைகளும் கையாளவும் மற்றும் கீழே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு குறிப்பிட்ட முடிக்கப்பட்ட வேலைகளுக்கு விலைப்பட்டி (DATA) ஆதாரமாக கொண்டு தயாரிக்கப்படும் விலை விவரப்பட்டியல் ( SCHEDULE OF RATES FOR FINISHED ITEMS), பணித் துறை, கட்டிடத் துறை, மழைநீர் வடிகால் துறை, பாலங்கள் துறை, பேருந்து சாலைகள் துறை, திடக்கழிவு மேலாண்மை துறை, மண்டல அலுவலகங்கள் மற்றும் அனைத்து பொறியியல் துறைகளும் நடைமுறைக்கு ஏற்றுக்கொள்வதற்காக, விலை விவர அட்டவணையின்படி.

1. (அடிப்படை இனங்கள் மட்டும் – ஊதியம் மற்றும் பொருட்களின்) விலை விவர அட்டவணை பொதுப்பணித்துறையை போலவே 01.07.2011 முதல் சென்னை மாநகராட்சியில் அனைத்துத் துறைகளும் அமுல்படுத்துவதற்கும்,

2. சேர்க்கைகள் அல்லது திருத்தங்கள் பொதுப்பணித்துறையிலிருந்து/ நெடுஞ்சாலைத் துறையிலிருந்து/சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் வாரியத்திலிருந்து பெறப்படுமாயின் அதற்கேற்றவாறு சென்னை மாநகராட்சியிலும் கையாள,

3. சென்னை மாநகராட்சியின் தற்காலிகத் தொழிலாளர்களுக்கு 01.07.2011 முதல் விலைவிவர அட்டவணைப் புத்தகத்தின்படி, ஊதியம் வழங்கவும்,

4. பொதுப் பணித்துறையிலிருந்து பெறப்பட்ட அட்டவணையில் இல்லாத இனங்களுக்கு விலைப்புள்ளி (QUOTATION) பெற்று குறைந்த விலையினை அந்தந்த துறை சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் முடிவு செய்யவும்,

4. தற்போது நடைமுறையிலுள்ள அனைத்து அடிப்படை விவரங்களின் அடிப்படையில் அந்தந்த துறை மேற்பார்வைப் பொறியாளர்கள் விலைப்பட்டி விவரம் தயாரிக்கவும் மற்றும் தொழிற் நுட்ப மாறுதல் இருப்பின்அதற்கேற்றவாறு விலைப்பட்டி விவரம் மாற்றி தயாரிக்கவும்,

**6.** பொதுப்பணித் துறையிலிருந்து பெறப்பட்ட திண்காரை (CEMENT) விலை ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ.**4,900/–** எனவும் , இரும்புக் கம்பிக்கான (STEEL) விலை ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ.**39,600/–** (பொருட்களின் விலை வேலை நடைபெறும் இடத்திற்கு வந்து சேர ஏற்படும் ஏற்றுதல், இறக்குதல், அடுக்குதல், எல்லா வரிகளும் உட்பட மற்றும் இதர செலவுகளும் சேர்த்து) எனவும் சென்னை மாநகராட்சியின் அனைத்துத் துறைகளும் விலைப்பட்டியில் பொதுப்பணித் துறை போலவே கையாளவும், மேலும் பொதுப்பணித் துறையிலிருந்து திண்காரை (CEMENT) மற்றும் இரும்புக் கம்பிகளுக்கான (STEEL) விலைகளை பெறப்படும் பொழுதெல்லாம் அனைத்து துறைகளிலும், பொதுப்பணித் துறையின் விலைகளைப் போலவே அமுல் படுத்துவதற்கும்,

நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"18.07.2011 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 91/2011, நாள்:18.07.2011-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''**21.07.2011** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். **102/2011** நாள் **21.07.2011–**ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.அ.8.வ.து.ந.க.எண்.ஆர்1/452/2011</u>**
**<u>ஆணையர் அவர்களின் 16.07.2011 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.230/2011 பொருள் எண.41

**<u>சென்னை மாநகராட்சி – மண்டலம்–8 – வார்டு–128 – சிதம்பரம் இராமலிங்க வள்ளலார் அறக்கட்டளை, நெசப்பாக்கம் – சொத்துவரியிலிருந்து விலக்கு அளிக்க கோருதல் – மன்றத்தின் அனுமதி</u>.**

* * * * *

தலைவர் சிதம்பரம் இராமலிங்க வள்ளலார் அறக்கட்டளை நெசப்பாக்கம், புதிய எண்.8, பழைய எண்.165/166, 10வது தெரு, அன்னை சத்யா நகர், நெசப்பாக்கம், சென்னை–78, அவர்களிடம் பெறப்பட்ட கடிதத்தில் அவர் ஆதரவற்ற வயது முதிர்வு அடைந்தவர்களுக்கும், கண்பார்வை அற்றவர்களுக்கும் தினமும் உணவு வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

மேலும், கண்பார்வை அற்றவர்களுக்கு அடைக்கலம் தந்து, அங்கேயே தங்க அனுமதி அளிதுள்ளதாகவும், பூந்தமல்லியில் அரசால் கண்பார்வை அற்றவர்களுக்கு நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் மாணவ,மாணவியர்களுக்கு மாதத்தில் இருமுறை மதிய உணவு வழங்கி வருவதாகவும் வாரம் இருமுறை உணவு தயாரித்து, அறக்கட்டளைக்கு சொந்தமான ஆட்டோவில், தயாரித்த உணவு பொருட்களை ஏற்றிக் கொண்டு, சாலையோரத்தில் பசியால் வாடும் நபர்களுக்கு உணவு பொட்டலங்கள் வழங்கப்படுவதாகவும், ஆண்டுக்கு இருமுறை கண்பார்வையற்ற 400 முதல் 500 நபர்களுக்கு ஊன்றுகோலும், துணிமணிகளும் தரப்படுவதாகவும், ஆங்கில புத்தாண்டு அன்று வடலுார் ராமலிங்க அடிகளார் அவர்களின் சபையில் வருகின்ற அனைத்து பக்தர்களுக்கும் உணவளிக்கப்படுவதாகவும், வள்ளலார் பிறந்த தினம், தைபூச விழா போன்ற நாட்களிலும் அன்னதானம் நடைபெறுவதாகவும், மேற்கூறிய செயல்பாடுகளுக்கு மக்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைகளை கொண்டு நடத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

பொது விலக்களிக்க சென்னை மாநகராடசி முனிசிபல் சட்டம் 1919ன் விதி 10ன் துணைவிதியின் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**“ Places used for the charitable purposes of sheltering the destitute or animals and orphanages. homes and school for the deaf and dumb, asylum for the aged and fallen women and such similar institutions run purely on philanthropic lines as are approved by the Council”.**

மேற்படி தொண்டு நிறுவனம் சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்து வரியிலிருந்து விலக்கு அளிக்க சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919ன் விதி 101ன் துணைவிதி எண்.(C)ல் கூறப்பட்ட ஷரத்துகளின்படி செயல்பட்டு வருகிறது. மேற்படி இடத்தை 26.04.2011 அன்ற உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–8 அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். மேற்படி அறக்கட்டளையின் செயல்பாடுகளை கண்டறிந்துள்ளார். மேற்படி கூறப்பட்ட அறக்கட்டளை கட்டிடத்தில் பார்வையற்ற மற்றும் ஆதரவற்ற இருப்பிடம் இல்லாத நபர்களுக்கு ஆதரவாக உணவு மற்றும் உறைவிடம் அளித்து தொண்டு புரிந்து வருகிறார்கள். இவர்கள் 1/2004–2005 முதல் சொத்துவரி விலக்கு வேண்டி கடிதம் ஏற்கனவே 19.04.2004 மற்றும் 09.04.2004 ஆகிய நாட்களில் கடிதம் சமர்ப்பித்ததாக தெரியவருகிறது. தற்சமயம் ரூ.1,498/– அரையாண்டு வரி என பட்டி எண்.08–128–4748–023ன் வழியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சொத்துவரி நிலுவைத் தொகை ரூ.16,148/– (2/1998–1999 முதல் 2/2003–2004 வரையிலான அரை ஆண்டுகளுக்கு 16.05.2011 அன்று செலுத்திவிட்டனர்.

எனவே, சிதம்பரம் இராமலிங்க வள்ளலார் அறக்கட்டளை நெசப்பாக்கம் என்ற நிறுவனத்திற்கு சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரியிலிருந்து விலக்கு அளிப்பது குறித்து நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''21.07.2011 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 118 /2011 நாள் 21.07.2011–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.அ.9.ந.க.எண்.டி9/003802/2011</u>**
**<u>ஆணையர் அவர்களின் 08.07.2011 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.231/2011 **பொருள் எண்.42**

**<u>அபிவிருத்தி கட்டணத் தொகையிலிருந்து விலக்களிக்கவும் கட்டிட அனுமதி கட்டணத்தில் 50 சதவீதம் விலக்களிக்கவும்</u>**

மண்டலம்–9, வார்டு 138ல் நில அளவை எண்.1/2, 2/2, 3/2 பிளாக் எண்.13 கிண்டி பார்க் விரிவான வளர்ச்சி திட்டப்பகுதியில் அமைந்துள்ள அடையாறு கேன்சர் இன்ஸ்ட்டியூட்டின் தலைவர் அவர்களுக்கு, சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் கூடுதல் கட்டிடம் (G+3) கட்டுவதற்கு திட்ட அனுமதி கடித எண்.இ4/12592/2009 மற்றும் சி4/4377/44A-D/2009, நாள் 13.11.2009 வழங்கப்பட்டது. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மேற்படி இடத்திற்கு திட்ட அனுமதி வழங்கி கட்டிட அனுமதிக்காக கோப்பினை சென்னை மாநகராட்சிக்கு அனுப்பி, மண்டலம்–9ல் CMD/00311/09, நாள் 01.12.09ல் பதிவு செய்யப்பட்டது.

உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்களின் 13.11.2009 நாளிட்ட கடிதத்தில் வ.எண்.4(1) ல் “மனுதாரர் சர்தார் பட்டேல் சாலையின் விரிவாக்கம் (நீளம் 79.6 மீ அகலம் 3.97 மீ மொத்த பரப்பு 316.10 ச.மீ) வளர்ச்சி விதிகளின்படி தானப்பத்திரத்தின் மூலம் சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். அதன் பிறகே உள்ளாட்சி நிறுவனம் கட்டிட அனுமதி வழங்க வேண்டும்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மானம் எண்.469/2010, நாள் 29.12.2010ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் சர்தார் பட்டேல் சாலை விரிவாக்க பகுதியை தானமாக எடுத்து கொள்ள எடுக்கப்பட்ட நடவடிக்கையில், சாலை விரிவாக்கத்திற்கான தோராய அபிவிருத்தி கட்டணத்தை விண்ணப்பதாரரரிடமிருந்து வசூலித்து நிலத்தை எடுத்துக் கொண்டு கட்டிட அனுமதியை வழங்கவும் ஆணையர் அவர்களின் ஆணை 20.06.2011 அன்று பெறப்பட்டது. இதன்படி தானப்பத்திரம் சான்றுறுதி அலுவலரால் சான்றொப்பமிட்டு பெறப்பட்டது. மேலும் ஆணையர் அவர்களின் ஆணைப்படி தோராய அபிவிருத்திக் கட்டணம் கணக்கிடப்பட்டு மேற்கண்ட கட்டணம் ரூ.12,56,100/-ஐ சென்னை மாநகராட்சிக்கு செலுத்த விண்ணப்பதாரருக்கு கடிதம் 21.06.2011 அனுப்பப்பட்டது.

கேன்சர் இன்ஸ்டியூட்டின் தலைவர் அவர்கள் 24.06.2011 நாளிட்ட கடிதத்தில் இந்நிறுவனம் தன்னார்வ தொண்டு நிறுவனம் என்றும், கேன்சர் இன்ஸ்டியூட்டில் இருக்கும் கட்டிடங்களுக்கு மாநகராட்சி மன்றத் தீர்மானம் எண்.262/84, நாள் 01.03.1984ன்படி வரிவிலக்கு உள்ளதாலும் கூடுதலாக கட்டப்பட உள்ள கட்டிடத்தின் கட்டிட அனுமதி கட்டணத்தில் 50% சதவீதம் விலக்கு அளிக்கவும், சர்தார்பட்டேல் சாலையில் சாலை விரிவாக்கம் செய்யக்கூடிய பகுதி சில வருடங்கள் கழித்து மேற்கொள்ளக்கூடும் என்பதால், சாலை விரிவாக்கப்பகுதி மாநகராட்சி எப்பொழுது விரிவாக்கம் செய்கிறார்களோ அப்பொழுது அந்த பகுதியை எடுத்து கொள்ளும்படியும் தெரிவித்துள்ளார்கள். மேலும் சாலை விரிவாக்கத்திற்கான தோராய அபிவிருத்திக் கட்டணத்தை தள்ளுபடி செய்யவும் வேண்டியுள்ளார்கள்.

எனவே, கேன்சர் இன்ஸ்டியூட்டின் தலைவர் அவர்கள் தன்னுடைய நிறுவனம் தன்னார்வ தொண்டு நிறுவனம் என கூறியதை கருத்தில் கொண்டும், மற்றும் சேவை மனப்பான்மையுடன் செயல்படுவதாலும் கீழ்கண்ட இனங்களுக்கு,

1. கேன்சர் இன்ஸ்டியூட்டின் நிறுவனத்தில் அமைந்துள்ள கட்டிடங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதால் ப.து.ந.க.எண்.ந.அ.டி3/1408/2003ன்படி கட்டிட அனுமதி கட்டணத்தை 50% சதவீதமாக பெறுவதற்கும்,

2. சர்தார் பட்டேல் சாலையில், கேன்சர் இன்ஸ்டியூட்டில் சாலை விரிவாக்கத்திற்காக விடப்பட்ட பகுதியை, இச்சாலையின் பிறபகுதிகள் விரிவாக்கம் செய்யும் பொழுது எடுத்து கொள்ளவும்,

3. சர்தார் பட்டேல் சாலையில், கேன்சர் இன்ஸ்டியூட் சாலை விரிவாக்கத்திற்கு செலுத்த வேண்டிய தோராய அபிவிருத்திக் கட்டணத் தொகையிலிருந்து விலக்கு அளிக்கவும்,

நிலைக்குழு (நகரமைப்பு) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“14.07.2011 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தின் தீர்மான எண்.2/2011, நாள் 14.07.2011-ன்படி நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘21.07.2011 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 119 /2011 நாள் 21.07.2011–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது‘’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.அ.9.மி.து.ந.க.எண்.அ2/148/2011</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 20.07.2011 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.232/2011 பொருள் எண்.43

**<u>வயதுமுதிர்வு ஓய்வு அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி, மண்லம்–9, மின்துறையில் உதவி கோட்ட மின்பொறியாளராக பணிபுரிந்து வரும் திரு. சி. ஏழுமலை, அவர்கள் வரும் 31.07.2011 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறவுள்ளார். இவர் சென்னை மாநகராட்சி மின்துறையில் 01.08.1977 அன்று முதல் உதவி மேற்பார்வையாளராக பணியில் சேர்ந்துள்ளார். இரண்டு ஆண்டுகள் திருப்திகரமாக பணிபுரிந்தமையால் 01.08.1979 அன்று தகுதிகாண் பருவம் முடித்துள்ளார். மேலும் 30.09.1985 உதவி பொறியாளராகவும் 12.09.2006 அன்று முதல் உதவி கோட்ட மின் பொறியாளராக பணிபுரிந்து வரும், இவரது மொத்த பணிக்காலம் 34 வருடங்கள் ஆகும்.

தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. தனியர் பணி செய்த அலுவலகங்களில் தனியர் மீது தணிக்கை தடை மற்றும் நீண்டகால முன்பண பாக்கி ஏதும் நிலுவையில் இல்லை என தெரியவந்துள்ளது. தனியருக்கு சென்னை மாநகாராட்சியின் குடியிருப்பு ஒதுக்கப்படவில்லை. தனியர் மீது மின்துறை தலைமையிடத்தில் ஒழுங்கு நடவடிக்கை மற்றும் தணிக்கை தடை ஏதும் நிலுவையில் இல்லையென சான்று பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லையென சங்க செயலாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியரின் பணி நியமனம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என விழிப்பு துறையிலிருந்து 06–07–2011 அன்று அறிக்கை பெறப்பட்டுள்ளது. தனியாின் ஓய்வூதிய கோப்பு பணிப்பதிவேடுடன் தணிக்கை துறைக்கு அனுப்பப்பட்டது. மண்டலம்–9ல் தனியர் மீது தணிக்கை தடை கண்டுபிடிக்கப்பட்டால் அதற்கான தொகையினை தனியரது பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும் என தனியருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியரின் பதவி வகுப்பு–2ன் கீழ் வருவதால் வயது முதர்வு ஓய்வில் செல்ல மன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும்.

எனவே, திரு. சி. ஏழுமலை உதவி கோட்ட மின் பொறியாளர் மண்டலம்–9 அவர்கள் மீதான தணிக்கைதடைகள் மற்றும் முன்பண நிலுவைகள் பின்னர் இருப்பது தெரியவரின் அத்தொகையை தனியருக்கு வழங்கப்படும் பணிக்கொடையில் இருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரை 31.07.2011 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக் குழு மூலமாக மாமன்றத்தின் ஆணை வேண்டப்படுகிறது.

“ இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றில் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.ஏ1/0720/2011</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 20.07.2011 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.**233/2011** பொருள் எண்.**44**

**<u>தன்விருப்ப ஓய்வு பின்னேற்பு அனுமதி</u>**

சென்னை மாநராட்சி மழைநீர் வடிகால் துறையின் செயற்பொறியாளர் திரு.ஏ.சுப்பிரமணியன் அவர்கள் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தன்விருப்ப ஓய்வில் செல்ல உள்ளதால் தனக்கு தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி மற்றும் பணியிலிருந்து விடுவிக்கவும் வேண்டி **20.04.2011** அன்று நியமனக்குழுவிற்கு அளித்த கடிதத்தில் கோரியுள்ளார்.

தனியர் **28.06.1979** அன்று பிற்பகல் சென்னை மாநகராட்சியில் உதவி பொறியாளராக பணியை துவக்கியுள்ளார். கடைசியாக செயற்பொறியாளராக பணிபுரிந்துள்ளார். தனியர் வகித்து வந்த உதவி பொறியாளர் பதவி கடைசியாக வகித்த செயற்பொறியாளர் பதவி ஆகியன யாவும் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. தனியர் பிறந்த தேதி **11.12.1954**– ஆக அவர் வயதுமுதிர்வு ஓய்வு பெறும் நாள் **31.12.2012** ஆகும். தனியர் **32** ஆண்டுகள் தகுதியான பணி முடித்துள்ளார்.

சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலர் அவர்கள் **09.05.2011** நாளிட்ட மேற்குறிப்பில் தனியர் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியரின் மீது வழக்குகள் நிலுவை குறித்து இயக்குநர், மாநில ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்ககம், சென்னை மற்றும் மத்திய குற்றப் புலனாய்வுத் துறை, சென்னை ஆகிய துறைகளில் இவர் மீது எந்தவித குற்றச்சாட்டுளும் நிலுவையில் இல்லை என தெரிவிக்ப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு தெரிவிப்பது யாதெனில், இவ்வலுவலர் பணியாற்றிய அனைத்து துறை / மண்டலங்கள் மற்று மழைநீர் வடிகால் துறையிலும் ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றச்சாட்டு விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை. மேலும் இத்துறையில் இவரை தனிப்பட்ட முறையில் பொறுப்பாகி தணிக்கைத் துறையால் தெரிவிக்கப்பட்ட நிதி இழப்பீடு ஏதுமில்லை. இவருக்கு வழங்கப்பட்ட மிகை ஊதியம் மற்றும் தணிக்கை தடைகளில் மாநகராட்சிக்கு இவரால் ஏற்பட்ட நிதி இழப்புகள் ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின், அவைகளை இவரது பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகுட்பட்டு, **15.07.2011** நாளிட்ட ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி இவரை மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு **18.07.2011** அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டது.

திரு.ஏ.சுப்பிரமணியன், செயற்பொறியாளர், மழைநீர் வடிகால் துறை அவர்களை மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி **18.07.2011** பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதித்ததற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு ஆணை வேண்டப்படுகிறது.

‘‘ இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றில் பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.க.கு.ந.க.எண்.அ8/2320/2011**
**ஆணையாளரின் 22.07.2011 நாளிட்ட குறிப்பு.**

தீர்மான எண்.234/2011 **பொருள் எண்.45**

**அரசாணை அமலாக்கத்திற்கு அனுமதி வேண்டி**

02/03/2011 நாளிட்ட நிதி (படிகள்) துறையின் அரசாணை எண்.80ல், கீழ்கண்ட வைப்பு நிதியில் சேர்ந்துள்ள நிதிக்கு 01.04.2010 அன்று ஆரம்பமாகும் 2010-2011ஆம் நிதியாண்டிற்கான வட்டி விகிதம் ஆண்டிற்கு 8 சதவீதமாக தொடரும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 01 | பொது வருங்கால வைப்பு நிதி (தமிழ்நாடு) |
| 02 | பங்கு தொகை பெறு வருங்கால வைப்பு நிதி (தமிழ்நாடு) |
| 03 | புதுக்கோட்டை மாநில வருங்கால வைப்பு நிதி (தமிழ்நாடு) |
| 04 | திருவாங்கோர் மாநில வருங்கால வைப்பு நிதி (தமிழ்நாடு) |
| 05 | திருவாங்கோர் படைப்பிரிவு அலுவலர் வருங்கால வைப்பு நிதி (தமிழ்நாடு) |

மேலும், வைப்பு நிதியில் சேர்ந்துள்ள, மூன்று மாதத்திற்கு மேல் கொடுபடாமல் காலங்கடந்து இறுதி தொகுப்பு வைப்பு நிதிக்கும் ஆண்டிற்கு 8 சதவீத வட்டியே தொடரும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, நிதி(படிகள்) துறை அரசாணை எண்.80, நாள்02.03.2011ஐ சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.07.2011 அன்று தீர்மான எண்.123/2011–ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எஸ்சி1/4139/1995**
**ஆணையர் அவர்களின் 20.07.2011 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.235/2011** பொருள் எண்.**46**

**தமிழ்நாடு கைப்பந்து சங்க நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட குத்தகை நிலத்தின் உரிமத்தை ரத்து செய்து சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ள அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–10, வார்டு எண்.149, மைலாப்பூர் கிராமம், புல எண்.4241/2 பகுதி, 4247/5 பகுதி பிளாக் எண்.91ல் உள்ள 15.5 மனையில் 1.5 மனை சத்துணவு கூடத்திற்கு போக மீதம் உள்ள 14 மனை நிலமானது குத்தகை அடிப்படையில் தமிழ்நாடு மாநில கைப்பந்துக் கழகத்திற்கு இந்திய கைப்பந்துக் கழக கூட்டமைப்பின் ஒப்புதலோடு, உலகளவிலான கைப்பந்து மண்டல வளர்ச்சி மையம் அமைப்பதற்காக, மாநகராட்சியின் விதி முறைகளுக்குட்பட்டு 30 ஆண்டுகால குத்தகைக்கு வழங்க 02.01.1998 நாளிட்ட அரசு ஆணையில் ஆணை வெளியிடப்பட்டது. இந்த அரசாணையினை அமல் படுத்த மன்றம், தீர்மான எண்.113/98, நாள்.26.02.1998ல் அனுமதி அளித்தது.

இதனைத் தொடர்ந்து மேற்படி நிலத்திற்கு மனை ஒன்றுக்கு மாதம் ரூ.1200/– வீதம் குத்தகை தொகை நிர்ணயம் செய்யப்பட்டு, மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 15% உயர்த்தி நிர்ணயிக்கப்படும் குத்தகை தொகையினை தமிழ் நாடு கைப்பந்து கழகம் செலுத்த வேண்டும், இரு சத்துணவுக் கூடங்கள் கட்டி ஒப்படைக்க வேண்டும் என்பவை உள்ளிட்ட நிபந்தனைகள் விதிக்கப்பட்டு, குத்தகைக்கான குத்தகை ஒப்பாவணம் 12.03.2001 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனம் குத்தகை ஒப்பந்தங்களின்படி ஒப்பாவணம் பதிவு செய்யப்பட்ட மார்ச்'2001 முதல் 31.10.2010 வரை செலுத்த வேண்டிய குத்தகை தொகை ரூ.28,47,009/–ல் இதுவரை செலுத்திய தொகை ரூ.3,72,000/– போக மீதம் ரூ.24,75,009/– செலுத்த வேண்டும். இது தொடர்பாக உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையால் தணிக்கை தடை எழுப்பப்பட்டு நிலுவையில் உள்ளது.

மேலும் ஒப்பந்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள முக்கிய நிபந்தனையான குத்தகை தொகையை நிலுவையின்றி செலுத்துதல் இரு சத்துணவு கூடங்கள் சென்னை மாநகராட்சிக்கு கட்டித்தருதல் ஆகிய நிபந்தனைகளை இந்நிறுவனம் இந்நாள் வரை செயல்படுத்தவில்லை. இது குத்தகை உடன்படிக்கை ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை மீறிய செயலாகும் குத்தகை நிபந்தனை எண்.14ன்படி 1.5 மனையில் இரு சத்துணவு கூடங்கள் கட்டி சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்காத நிலையில் மேற்படி 1.5 மனை பகுதியும் மேற்கண்ட குத்தகைதாரரின் பயன்பாட்டில் (அனுமதியற்ற அனுபோகம்) இருந்து வருகிறது. எனவே மேற்படி 1.5 மனை பகுதிக்கும் குத்தகை தொகையை குத்தகைதாரர் செலுத்த வேண்டும். அதன்படி மொத்தம் 15.5 மனைக்கு 31.10.2010 முடிய நிலுவைத் தொகை ரூ.24,75,009/– செலுத்தப்பட வேண்டியள்ளது.

24.08.2009 நாளிட்ட தமிழ்நாடு கைப்பந்து கழகத்தின் கடிதத்தில் மேற்படி நிலத்தில் உள் விளையாட்டு அரங்கக் கட்டிடம் கட்டுவதற்கு எம்.எம்.டி.ஏ.விடம் கட்டிட அனுமதி பெறவேண்டி உள்ளதால் மேற்படி நிலத்திற்கான குத்தகை நிலுவைத் தொகை விவரத்தை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்சொன்ன காரணங்களால் தமிழ்நாடு மாநில கைப்பந்து கழகம் தற்போது அனுபவித்து வரும் 15.5 மனை நிலத்திற்கு (மன்றத்தால் அனுமதிக்கப்பட்டு குத்தகைக்கு விடப்பட்ட 14 மனை மற்றும் அனுமதியற்ற அனுபோகத்தில் உள்ள 1.5 மனை) மன்ற தீர்மானங்களின்படி குத்தகை மதிப்பு ஒப்பாவணம் பதிவு செய்யப்பட்ட மார்ச் 2001 முதல் அக்டோபர் 2010 வரை செலுத்த வேண்டிய தொகை ரூ.28,47,009/– ஆகும். இதுவரை செலுத்திய தொகை ரூ.3,72,000/– போக மீதம் குத்தகை நிலுவைத் தொகையான ரூ.24,75,009/–ஐ (ரூபாய் இருபத்தி நான்கு லட்சத்து எழுபத்தைந்தாயிரத்து ஒன்பது மட்டும்) உடனடியாக சென்னை மாநகராட்சிக்கு செலுத்துமாறு மேற்படி கைப்பந்து கழகத்திற்கு 20.12.2010 மற்றும் 22.02.2011 நாளிட்ட இவ்வலுவலக கடிதங்களில் கேட்பு அனுப்பி வைக்கப்பட்டது. மற்றும் குத்தகை ஒப்பந்த விதிமுறைகளை மீறி உள்ளதால் மேற்படி கழகத்திடமிருந்து நிலத்தை மீட்க 15.06.2011 நாளிட்ட தீர்மானத்தில் (எண்.64/11) 10வது வார்டு குழு பரிந்துரை அளித்துள்ளது.

மேலும், இச்சங்கம் குத்தகை உடன்படிக்கையின்படி 1.5 மனையில் சத்துணவுக் கூடங்களை கட்டி சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்காமலும் குத்தகை தொகையினை சரிவர செலுத்தாமலும் உள்ளது. இச்சங்கம் மார்ச்–2001 முதல் ஜூன்–2011 வரையிலான காலத்திற்கு செலுத்த வேண்டிய தொகை விவரம் கீழ்வருமாறு:

| மன்றத் தீர்மான எண் | காலம் | 15.5 மனைக்கு குத்தகை தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| எண்.432/2000, நாள்.20.07.2000 | 3/2001 முதல் 3/2003 வரை 25 மாதங்கள் | ரூ.1320 x 15.5 மனைக்கு x 25 மாதங்கள் | ரூ.5,11,500 |
| எண்.500/2004, நாள்.23/12/2004 (15% increase) | 01.04.2003 முதல் 31.03.2006 வரை 36 மாதங்கள் | ரூ.1518x 15.5 மனைக்கு x 36 மாதங்கள் | ரூ.8,47,044 |
| எண்.312/2006, நாள்.31.12.2006 (15% increase) | 01.04.2006 முதல் 31.03.2009 வரை 36 மாதங்கள் | ரூ.1746 x 15.5 மனைக்கு x 36 மாதங்கள் | ரூ.9,74,268 |
| எண்.28/2011 நாள்.31.01.2011 (15% increase) | 01.04.2009 முதல் 30.06.2011 வரை 27 மாதங்கள் | ரூ.2008 x 15.5 மனைக்கு x 27 மாதங்கள் | ரூ.8,40,348 |
| | | மொத்தம் | ரூ.31,73,160 |
| | | இது வரை செலுத்தியுள்ள குத்தகை தொகை | ரூ.3,72,000 |
| | | செலுத்த வேண்டியுள்ள தொகை | ரூ.28,01,160 |

இச்சங்கம் 29.11.2002 அன்று ரூ.2,04,600/–ம், 27.10.2003 அன்று ரூ.1,67,400/– என மொத்தம் ரூ.3,72,000/– இதுவரை செலுத்தியுள்ளது.

எனவே, இச்சங்கம் மார்ச் 2001 முதல் ஜூன் 2011 வரையிலான குத்தகை நிலுவைத் தொகை ரூ.28,01,160/–யினை செலுத்தாததாலும் குத்தகை உடன்படிக்கையின்படி 1.5 மனையில் இரண்டு சத்துணவு கூடங்கள் கட்டி தராததாலும், இச்சங்கத்திற்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தை ரத்து செய்து இந்நிலத்தை மீட்க நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.07.2011 அன்று தீர்மான எண்.124/2011–ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>ம.அ.10.ந.க.எண்.சி1/3931/2011</u>**
**<u>ஆணையர் அவர்களின் 21.7.2011 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.236/2011 பொருள் எண் .47

**<u>வேளச்சேரி சட்ட மன்ற உறுப்பினர் அலுவலகம் தற்காலிகமாக ஒதுக்கீடு செய்ய அனுமதி</u>**

வேளச்சேரி தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் அவர்களுக்கு பொதுப்பணிதுறையினரால் அலுவலகம் கட்டிடம் கட்டித்தரும் வரையில், மண்டலம்–10ல் அடையாறு அல்லது திருவான்மியூர் பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சி அலுவலக பகுதியில் தற்சமயம் அலுவலகம் இயங்க ஒதுக்கீடு செய்து தருமாறு வேளச்சேரி தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் தனது 15.7.2011 நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

வேளச்சேரி தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மண்டலம்–10, பகுதி–30(தி) உள்ள பகுதி அலுவலக கட்டிடத்தின் முதல் மாடியில் உள்ள 2 அறைகளை தற்காலிகமாக வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் அலுவலக பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்ய தேர்வு செய்யப்பட்டது. இதன்படி இக்கருத்துரு 10வது வார்டு குழுவின் தீர்மானம் எண்.147, தேதி–20.7.2011ன்படி பரிந்துரைசெய்துள்ளது.

ஆகவே மண்டலம்–10, பகுதி–30(தி) உள்ள பகுதி அலுவலக கட்டிடத்தின் முதல் மாடியில் உள்ள 2 அறைகளை தற்காலிகமாக வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் அலுவலக பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.07.2011 அன்று தீர்மான எண்.125/2011–ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>சு.ஜெ.ந.வே.தி.எண்.1/245/2011</u>**
**<u>ஆணையர் அவர்களின் 25.07.2011 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.237/2011 பொருள் எண்.48

**<u>சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வறுமையில் வாழும் முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வறுமைக்கோட்டு எண் வழங்க அனுமதி.</u>**

சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதத்தில் சென்னை மாவட்டத்திலுள்ள ஐந்து வட்டாச்சியர் அலுவலகங்கள் மூலமாக தெரிவு செய்யப்பட்ட 1337 பயனாளிகளுக்கு இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் வழங்க இவர்களுக்கு வறுமைக்கோட்டு எண் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது . அதன் விவரம் கீழ்வருமாறு.

| வ.எண். | வட்டாட்சியர் அலுவலகப்பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | எழும்பூர் – நுங்கம்பாக்கம் | 250 |
| 2. | மைலாப்பூர்– திருவல்லிக்கேணி | 305 |
| 3. | மாம்பலம்– கிண்டி | 194 |
| 4. | புரசைவாக்கம்–பெரம்பூர் | 127 |
| 5. | கோட்டை–தண்டையார்பேட்டை | 461 |
| | மொத்தம் | 1337 |

இது தொடர்பாக தெரிவிப்பதுயாதெனில் சென்னை மாநகரத்தில் உள்ள வட்டாச்சியர் அலுவலகங்கள் மூலமாக வழங்கப்படும் முதியோர் ஓய்வூதியப் பயனாளிகளுக்கு தனி வறுமைக்கோட்டு எண் சுவர்ண ஜெயந்தி நகர்புற வேலை வாய்ப்பு திட்டம் மூலமாக வழங்கப்பட்டுவருகிறது. கடந்த 29.1.2011 அன்று நடைபெற்ற மாமன்ற கூட்டத்தொடரில் 591 பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டு எண்.216794 முதல் 217384 வரை வறுமைக்கோட்டு எண் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக தற்பொழுது சென்னை மாவட்ட ஆட்சியாளரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 1337 பயனாளிகளுக்கும் வறுமைக்கோட்டு எண்.217385 முதல் 218721 வரை வழங்க பரிந்துரைக்கப்படுகிறது.

எனவே மேலே குறிப்பிட்டுள்ள 1337 பயனாளிகளுக்கும் வறுமைக்கோட்டு எண்.217385 முதல் 218721 வரை வழங்க நிலைக்குழு(கல்வி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

“ஏற்கனவே 13.7.2011 அன்று நிலைக்குழு(கல்வி)யின் கூட்டம் முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு நிலைக்குழு(கல்வி)யின் தீர்மான எண்.19/2011 நாள். 27.07.2011 ன்படி சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.அ.4.ந.க.எண்.அ1/3527/2011</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 20.07.2011 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.238/2011 பொருள் எண்.49

**<u>ஒரு வழி பணியிட மாற்றம்</u>**

மண்டலம்–4, திரு. எல். ஸ்ரீதரன், உதவி செயற்பொறியாளர் (மாற்றுப்பணி அடிப்படையில் இயந்திரப் பொறியியல் துறை) பணியாற்றி வரும் அன்னார் சென்னை மாநகராட்சியில் உதவி பொறியாளராக (இயந்திரம்) இரண்டு வருட காலத்திற்கு தொகுப்பூதிய அடிப்படையில் 13.08.93 அன்று பணியமர்வு செய்யப்பட்டார். அதற்கு பிறகு ஊதிய விகித அடிப்படையில் 12.05.1995 அன்று முதல் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். மேலும் அன்னாருக்கு 12.05.1995ல் பணி வரன்முறையும் 12.05.1997ல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் 31.08.2019 அன்று வயதுமுதிர்வு காரணமாக ஓய்வு பெற உள்ளார். இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை என விழிப்பு அலுவலர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

திரு. எல். ஸ்ரீதரன், உதவி செயற்பொறியாளர் அவர்களின் 31.05.2011 நாளிட்ட கடிதத்தில் தான் சென்னை மாநகராட்சியில் பொறியியல் துறையில் கடந்த 16 ஆண்டுகளாக பணியாற்றி வருவதாகவும் தனது சொந்த ஊர் நீலகிரி மாவட்டம், ஊட்டியில் தனது தாய், மனைவி, குழந்தைகள், குடும்பம் உள்ளதாகவும் குடும்பத்தை வழி நடத்திச் செல்லவும், குழந்தைகளின் படிப்பு சம்மந்தமாகவும், குடும்பத்தின் மருத்துவம் சம்மந்தமாகவும் தான் குடும்பத்தை சந்திக்க ஊட்டிக்கு செல்ல வேண்டி உள்ளதாகவும், தான் சென்னையில் தனியாக வீடு எடுத்து தங்கி சிரமத்திற்குள்ளாகி வருவதாகவும், இதனால் தற்போது உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளது எனவும், தன்னை சென்னை மாநகராட்சியிலிருந்து கோவை மாநகராட்சிக்கு பணியிடமாற்றம் செய்ய கோரியுள்ளார். மேலும், தனியர் பணிமாற்று அடிப்படையில் பணிபுரிந்து வரும் இயந்திர பொறியியல் துறை தலைவர் அவர்களும் தனியரின் ஒருவழி பணியிட மாற்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளார்.

தனியர் மீது விசாரணைகளோ / ஒழுங்கு நடவடிக்கைகளோ ஏதும் நிலுவையில் இல்லாத நிலையில், திரு. எல். ஸ்ரீதரன், உதவி செயற்பொறியாளர் (மாற்றுப் பணி அடிப்படையில் இயந்திரப் பொறியியல் துறை) அவர்களை சென்னை மாநகராட்சியிலிருந்து கோவை மாநகராட்சிக்கு பணியிடமாற்றம் செய்ய ஏதுவாக அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனகுழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> ''இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றில் பரிந்துரைத்து மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.எஸ்சி1/2220/2011</u>**
**<u>ஆணையர் அவர்களின் 26.07.2011 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்.239/2011** பொருள் எண்.**50**

**<u>தந்தை பெரியார் அவர்களின் திருஉருவச்சிலை நிறுவுவதற்கு அனுமதி</u>**

மண்டல அலுவலர், மண்டலம்–**9** அவர்களின் **25.07.2011** நாளிட்ட குறிப்பில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் வேண்டுகோளின்படி மண்டலம்–**9**, வார்டு–**135**ல் ஆலந்துார் சாலை, மசூதி தெரு சந்திப்பில் உள்ள சாலை தீவில் தந்தை பெரியார் அவர்களின் திருஉருவச்சிலை அமைப்பதற்கு மண்டலம்–**9**, வார்டுகுழு தீர்மானம் **25.07.2011**ல் பெறப்பட்டு அரசு அனுமதி பெற மன்றத் தீர்மானம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதன் தொடர்பாக, மண்டலம்–**9**, வார்டு–**135**ல் ஆலந்துார் சாலை, மசூதி தெரு சந்திப்பில் உள்ள சாலை தீவில் தந்தை பெரியார் அவர்களின் திருஉருவச்சிலை அமைப்பதற்கு அரசு அனுமதி பெற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **27.07.2011** அன்று தீர்மான எண்.**126/2011**–ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**மன்றச்செயலாளர் (பொ)** **ஆணையாளர்**

**மேயர்**

**29.07.2011 வெள்ளிக் கிழமை**
**காலை 10.00 மணிக்கு**
**நடைபெற்ற சாதாரண**
**மன்றக்கூட்ட தீர்மானங்கள்**